CHARTERED ACCOUNTANCY
CAB II
ENGLISH MEDIUM
STARTED ON
09.02.2013
VEAL BUSINESS COLLEGE
ADMISSION STILL OPEN
CONTACT : 0777 555 738

சித்திரை மாதம் 14ம் திகதி

April 27, 2013

# மலைமுரசு®

MALAIMURASU

அறைவு 01 இயம் 40

உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாகும்

விலை – 20.00 Registered as a Newspaper in Sri Lanka பக்கங்கள் – 10 பிரதி சனி தோறும் திருமலையில் இருந்து வெளியாகும் வார இதழ்

# ஓரினப் பாலுறவு?

(ஸ்ரீ)

## புல்மோட்டையில் பெற்றோர்கள் படுகொலை

## வளர்ப்பு மகள் கைங்கரியம்





தத்தெடுத்து வளர்த்த பத்தொன்பது வயதுப் பெண்குழந்தையால் வளர்ப்புத்தாயும், தகப்பனும் கோடரியால் வெட்டுண்டு மரணமான பரிதாபச் சம்பவம் ஒன்று புல்மோட்டையில் நடந்தேறியுள்ளது.

செங்கலடியில் காதலுக்காக காதலனுடன் இணைந்து பெற்றோரைக் கோரக் கொலை செய்த செய்தியின் வீச்சம் தணியும் முன்... 7

## சட்டவிரோத கடைகள் சுற்றி வளைப்பு



கிண்ணியா - மட்டக்களப்பு வீதியில் கிண்ணியா நகரசபைக்குட்பட்ட எல்லைக்குள் காணப்படும் 7

## அனைத்து மசாஜ் நிலையங்களும் அலஸ்தோட்டத்திலிருந்து நீக்கப்பட வேண்டும்

### அலஸ்தோட்ட மக்கள் வேண்டுகோள்!..

"இரவு பத்து மணியளவில் 'என்னால் முடியாமல் இருக்கிறது' என்னும் சிங்கள மொழி அலறல் கேட்டு அருகில் அமைந்திருக்கும் மசாஜ் நிலையத்தினுள் ஏதோ விபரீதம் நிகழ்வதை உணர்ந்து கொண்டேன். உடனடியாக அயலவர்களை துணைக்கு அழைத்துக்கொண்டு சம்பவ இடத்திற்கு சென்றேன்.

வாசலில் கதவு மூடப்பட்டிருக்க அதை திறந்துகொண்டு நாம் உள்ளே நுழைவதற்கிடையில் வளவினுள் இருந்து இன்டகூலர் வாகனம் ஒன்று மிக வேகத்துடன் எம்மைக் 7

## படகிலிருந்து விழுந்தவர் உயிரிழந்தார்!!

திருகோணமலை விஜிதபுர பிரதேசத்திலுள்ள கடலில் தவறி விழுந்தவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார். கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இச் சம்பவத்தில் விஜிதபுர பகுதியை சேர்ந்த உபநந்த என்பவரே உயிரிழந்துள்ளார். (பவி)

## இனவாதத்துடன் செயற்படுபவர் யாராயினும் சட்டத்தின் முன் நிறுத்துங்கள்! தலைவர் – ஜம்யத்துள் உலமா, திருமலை

(ஸ்ரீ)

இனங்களிடையே நிம்மதியின்மையை ஏற்படுத்தும் நோக்குடன் இனவாதத்துடன் செயற்படும் எவராக இருந்தாலும் அவர்களைக் கைதுசெய்து சட்டத்தின் முன் நிறுத்துங்கள் என கிழக்கிலங்கையின் ஜம்யத்துள் உலமா சபையினர் பாதுகாப்புச் செயலர் கோத்தாபாய இராசபக்சவைக் கோரியுள்ளனர் எனத் திருகோணமலையின் ஜம்யத்துள் உலமா சபையின் தலைவர் அஷ்ஷெய்க் முகமது ராசிக் துவான் ஆரிதீன் (நளிமி) அவர்கள் மலைமுரசிற்குத் தெரிவித்துள்ளார்.

இம்மாத ஆரம்பத்தில் கிழக்கிலங்கையின் ஜம்யத்துள் உலமாசபையினருடனான விசேட சந்திப்பொன்றைப் பாதுகாப்புச். 7

## சிகை அலங்காரத்திலும் முகச் சவரத்திலும் தலையிடாதே ஆசிரியருக்கு மண்டையோட்டுப் பயமுறுத்தல்

(வதனி)



"சிகை அலங்காரத்திலோ, முகச் சவரத்திலோ தலையிடாதே'' என வரையப்பட்ட மிரட்டல் கடிதத்துடன் மாணவர்களின் சிகை அலங்காரத்தில் கண்டிப்பாக இருந்தமைக்கு எதிர்ப்பு தெரிவித்து ஒரு குழுவினரால் ஆசிரியர் ஒருவர் பயமுறுத்தப்பட்டு உள்ளார். குறித்த ஆசிரியரின் வீட்டு வாசலில் கடந்த புதன் கிழமை இரவு மண்டை ஓடு வைக்கப்பட்டு குங்குமமும் தூவப்பட்டு உள்ளது.

வீட்டு நுழைவாயிலில் பாதிக்கப்பட்ட மாணவர்கள் என்று எழுதப்பட்ட இக் கடிதமும் வைக்கப்பட்டு இருந்தது.

ஸ்ரீகோணேஸ்வரா இந்துக் கல்லூரியின் ஆசிரியரின் வீட்டிற்கே இவ்வாறு அச்சுறுத்தல் விடுக்கப் பட்டுள்ளது. 7

## இதய நோயினால் பாடசாலை மாணவி சாவு (கலா)

இதய நோயினால் திருகோணமலை சண்முகா மகளிர் கல்லூரியின் உயர்தர வகுப்பு மாணவியொருவர் அகாலச் சாவு அடைந்துள்ளார். திருச்சிலோகாநந்தம் மதுசனா என்ற 19 வயதுடைய மாணவியே இவ்வாறு சாவடைந்துள்ளார். (2ம் பக்கம்)

## இரவுக் களியாட்டத்தின் பின் வீடு திரும்பிய இளைஞர்கள் விபத்தில் பலி!!!

(கலா)

கடந்த பத்தொன்பதாம் திகதி வாகரையில் நடந்த இரவு நேர இசைவிழாவிற்கு சென்று திரும்பும் வழியில் விபத்தை எதிர்கொண்ட இளைஞர்களுள் இரண்டாவது இளைஞன் 25.4.2013 அன்று மட்டக்களப்பு வைத்தியசாலையில் சாவடைந்தார்.

அற்புதராஜா தனுசன் என்ற 19 வயதுடைய மாணவனே ஒருவாரகால மருத்துவப் பராமரிப்பில் சுயநினைவற்ற நிலையிலிருந்து சாவடைந்துள்ளார். இவர் ஈசசிலம்பற்று.. 7

## கட்டுரைப் போட்டியில் இரண்டாமிடம்

இலங்கை மனித உரிமைகள் திணைக்களம் மொழி உரிமைகள் தொடர்பாக அகில இலங்கை ரீதியில் நடாத்திய போட்டியில் தி/புனித மரியாள் கல்லூரி மாணவி சங்கீர்த்தனா காளிமுத்து அகில இலங்கை கட்டுரைப் போட்டியில் இலங்கை ரீதியில் இரண்டாம் இடத்தைப் பெற்றுக்கொண்டுள்ளார்.

"இலங்கையின் இனப் பிரச்சினைகளும் மொழி உரிமைகளும்" எனும் தலைப்பில் இவர் எழுதிய கட்டுரையே தேர்வாணையத்தால் இரண்டாமிடத்துக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளது.

(இக் கட்டுரையினை 4ம் பக்கத்தில் காண்க) (பவி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
159A, 2ஆம் மாடி, கடல் முக வீதி,
திருக்கோணமலை.
malaimurasu@hotmail.com
0754252042

## வணக்கம்

**கொலைக்குக் காரணமாய்ச் சினிமா !!!**

அதிர்ந்தது அண்மையில் கிழக்கு.

செங்கலடியில் தாயையும் தந்தையையும் காதலின் பெயரால் கொலை செய்த பெண் மற்றும் ஆண்களின் திட்டமிட்ட கொலையாற்றல் தந்திரோபாயத்தினை எண்ணி நாம் அதிர்ந்து போனோம்.

16 வயதானவர்களின் திட்டமிடல் மற்றும் கொலைக்கான தந்திரோபாயங்களை வகுத்துக் கொண்டமை என்னவோ அவர்களைப் பார்த்து அதிசயிக்க வைத்தது. ஆனால் அவாகள் கைது செய்யப்பட்ட பின்னர் அவர்களை விசாரணைக்கு உட்படுத்திய காவல்துறைக்கு அவர்கள் வழங்கிய வாக்குமூலத்தில் அப் பெண் சொன்ன செய்தி என்ன தெரியுமா?

"குருவி" மற்றும் "அயன்" ஆகிய இரு திரைப்படங்களையும் பார்த்துப் பல்வேறு கொலைத் திட்டங்களை நாம் தீட்டினோம் என்பதுதான்.....

தமிழ்த் திரைப்படங்களின் தாக்கம் இப்போதாவது உங்களுக்குப் புரிகின்றதா????

கதாநாயகத்துவத்தின் உச்சக் கட்டம் அவனது எதிரிகள் அனைவரையும் கொலை செய்வதாகவே தற்கால சினிமாவில் அமைந்துள்ளது.

அங்கு மன்னிப்பு என்பதற்கு இடமில்லை. பொலீஸ் அதிகாரிகளாக வரும் கதாநாயகர்களைத் தவிர்த்துப் பார்த்தால் தற்காலத்தில் பெயர் சொல்லக்கூடிய கதாநாயகர்கள் எல்லோருமே ரவுடிகளாகவே அறிமுகமாகின்றமையை நாம் காணலாம். அவ்வாறு ரவுடிகளாக அல்லது களவாணிகளாக சித்தரிக்கப்படும் கதாநாயகர்களை எமது சமூகமும் ஏற்றுக்கொண்டு அக் களவாணிக் குணத்தையும் கதாநாயகத்துவமாக மனதில் வரித்துக்கொள்ளும் இளஞ்சந்ததியை வளரத் தொடங்கி விட்டது.

திருகோணமலையில் இந்தியப் பட நாயகர்களுக்கான இரசிகர் மன்றங்கள் உருவாகியிருக்கின்றன. அண்மையில் ஒரு கணணி வலைத்தளச் சேவை வழங்கு நிலையத்திற்குச் சென்றபோது அக் கடையின் சுவரில் காணப்பட்ட பெரிய அளவிலான பெனரில் "திருகோணமலை ரஜனி இரசிகர் மன்றம் இளைய தளபதி விஜய் யின் பிறந்த நாளுக்கு வாழ்த்துத் தெரிவிக்கின்றது" என பல படங்களுடன் பலவர்ணச் சித்திரமாக மாட்டப் பட்டிருந்ததைக் கண்ணுற்றேன்.

இந்தப் போக்கின் முடிவு இவ்வாறான கொலைகளில் தானே போய் நிற்கப் போகின்றது.....

இங்கு பெற்றோருக்குதான் பெரும் பொறுப்பு உண்டு.

குழந்தையாக இருக்கும் போதே தமது மழலைச் செல்வங்களை காட்டூன் படங்களை பார்க்கப் பழக்கிவிடும் நாம் சினிமா என்பதையும் அதன் பால் கொலை செய்தல் சரியானது என்பதையும் அவர்களின் மனத்தில் ஆளப் பதித்து விடுகின்றோம்.

வாசிப்புப் பழக்கத்திலிருந்து நீண்ட தூரம் விலகிச் செல்லத் தொடங்கியிருக்கும் எமது சமூகம் எதிர்மறைக் கூர்ப்பாக விலங்குகளை நோக்கிக் கூர்ப்படையத் தொடங்கி விட்டது.....

# கிழக்கு மாகாண அமைச்சர்களின் பிரத்தியேக உத்தியோகத்தர்களுக்கு கொடுப்பனவு

மாகாண அமைச்சர்களின் பிரத்தியேக உத்தியோகத்தர்களுக்கு விசேட பிராயாண கொடுப்பனவு வழங்க மாகாண அமைச்சரவை தீர்மானித்துள்ளது. கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சர் எம்.எஸ். உதுமா லெப்பையினால் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை பத்திரத்திற்கே மாகாண அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

முதலமைச்சர் நஜீப் ஏ. மஜீத் தலைமையில் இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்தின்போதே இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ள என மாகாண அமைச்சரவை பேச்சாளர் எம்.எஸ்.உதுமாலெப்பை தெரிவித்தார். இதனால் முதலமைச்சர் மற்றும் அமைச்சர்களின் பிரத்தியோகச் செயலாளர்கள், இணைப்புச் செயலாளர்கள், பொதுசன தொடர்பு அதிகாரிகள் மற்றும் பிரத்தியேக உதவியாளர் ஆகியோருக்கே இந்த கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது. இவர்களுக்கு விசேட பிராயாண கொடுப்பனவாக மாதாந்தம் 5,000 ரூபா வழங்கப்படவுள்ளது இதனால் முதலமைச்சர் மற்றும் அமைச்சர்களின் பிரத்தியேகச் செயலாளர்கள், இணைப்புச் செயலாளர்கள், பொதுசன தொடர்பு அதிகாரிகள் மற்றும் பிரத்தியேக உதவியாளர் ஆகியோருக்கே இந்த கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது. இவர்களுக்கு விசேட பிராயாண கொடுப்பனவாக மாதாந்தம் 5,000 ரூபா வழங்கப்படவுள்ளது இதேவேளை, கிழக்கு மாகாண சபை உறுப்பினர்களின் சம்பளத்திற்கு மேலதிகமாக மாதாந்தம் 45,000 ரூபா வழங்குவதற்கு அண்மையில் மாகாண அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சம்பூர் மக்களின் பிரச்சினைக்கு தீர்வு மாகாண அமைச்சரவை அங்கீகாரம்

சம்பூர் பிரதேச மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் நோக்கில் கிழக்கு மாகாண முதலமைச்சர் நஜீப் ஏ. மஜீத் தலைமையில் விசேட கூட்டமொன்றை கூட்டுவதற்கு கிழக்கு மாகாண அமைச்சரவை தீர்மானித்துள்ளது. பாதுகாப்பு உயர் அதிகாரிகள், சம்பூர் மக்களின் பிரதிநிதிகள், இந்த பிரச்சினை தொடர்பான ஏனைய அதிகாரிகள் முதலானோரை அழைத்து கிழக்கு மாகாண முதலமைச்சர் நஜீப் அப்துல் மஜீத் தலைமையில் விசேட கூட்டமொன்றை கூட்டி சாத்தியமான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக அங்கீகாரத்தையும் மாகாண அமைச்சரவை வழங்கியுள்ளது.

இந்த பிரதேச மக்களின் உண்மையான பிரச்சினைகளுக்கு சாத்தியமான தீர்வுகள் சம்பந்தமாக விசேட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என மாகாண அமைச்சர் எம்.எஸ். உதுமாலெப்பையினால் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை பத்திரத்தினை அடுத்தே இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## ஆசியமுரசு

# துணி ஆலை தகர்வு இருநூற்றுக்கும் மேற்பட்டோர் பலி

பங்களாதேஸின் டாக்கா நகரில் இடம் பெற்ற துணி ஆலைக்கட்டிடச் சரிவில் அங்கு பணியாற்றிக் கொண்டிருந்த சுமார் 200 தொழிலாளர்கள் தற்போதுவரை பலியாகியுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

கட்டட இடிபாடுகளுக்குள் மாட்டுப்பட்டுள்ளவர்களை மீட்கும் பணி தொடர்ந்த வண்ணம் உள்ளது என அங்குள்ள உள்நாட்டுத் தகவல் மையமொன்று தெரிவித்துள்ளது.

ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் கைகளில் தடிகளைத் தாங்கியவாறு "ஆலை உரிமையாளர்கள் தண்டிக்கப்பட வேண்டும்" என்ற கோசத்துடன் டாக்காவின் வீதிகளில் வலம் வருவதாகவும் அவர்கள் ஏற்கனவே பங்களாதேஸ் துணிஆலை உற்பத்தி மற்றும் ஏற்றுமதியாளர் சம்மேளனத்தைத் தாக்கியுள்ளதாகவும் அடையாளம் காட்ட விரும்பாத செய்தியாளர் ஒருவர் சர்வதேச ஊடக இல்லங்களுக்குச் செவ்வியுள்ளார்.

பல சர்வதேச ஆடை உற்பத்தி நிலையங்கள் தமது உற்பத்திச் சாலையினை பங்களாதேஸில் நிர்மானித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. ஏனெனில் ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும் போது கூலிகுறைந்த தொழிலாளர்களை அந்நாட்டிலேயே பெற்றுக்கொள்ள முடியும் என்பதாலேயே. கொல்லப்பட்ட தொழிலாளரின் எண்ணிக்கை மேலும் உயர்வடையலாம் என அஞ்சப்படுகின்றது.

# இந்திய எல்லைக்குள் ஊடுருவியது சீனத்துருப்புக்கள்

இந்தியாவிற்குச் சொந்தமான ஹிமாசலப் பிரதேசத்தில் முன்நகர்ந்துள்ள சீனத் துருப்புக்களை பின்னெடுக்குமாறு இந்தியா சீனாவைக் கேட்டுள்ளது.

கிழக்குக் காஸ்மீரின் டெஸ்பாங் பள்ளத்தாக்குப் பிரதேசத்தில் இந்திய எல்லைக்குள் சுமார் 10 கிலோமீற்றர் தூரம் வரை முன்னகர்ந்துள்ள சீனத்துருப்புக்கள் அங்க தமது தற்காலிக முகாம்களை அமைக்கும் பணியில் ஏப்ரல் மாதம் 15ம் திகதியிலிருந்து ஈடுபட்டுள்ளதாக இந்தியா குற்றஞ்சாட்டியுள்ளது. இந்திய இராணுவக் கமாண்டர்கள் இவ்விடயம் தொடர்பாக இருமுறை சீன இராணுவக் கமாண்டர்களுடன் பேச்சுக்களை நிகழ்த்தியுள்ள போதும் சீனத்துருப்புக்கள் பின்வாங்காமலுள்ளது.

சீனத் துருப்பினர் இந்திய எல்லைக்குள் அத்துமீறி வருதல் என்பது அடிக்கடி நிகழ்ந்துள்ளது ஆயினும் இம்முறை இந்திய எல்லைப் பரப்பனுள் மிக நீண்டதூரம் அத்துமீறியுள்ளது முதல் முறையாக உள்ளது.

எனினும் ஹிமாசல எல்லைப் பிரதேசம் அமைதியாகவே இருப்பதாகவும் இந்திய ஊடகங்களின் தவறான புரிந்துணர்வே இச் செய்திக்குக் காரணம் என்றும் சீனத் தரப்பு தெரிவித்துள்ளது.

# கிண்ணியா மீனவர்கள் கடலுக்கு செல்ல வேண்டாம்

கிண்ணியா பிரதேச மீனவர்கள் எதிர்வரும் 29ம் 30ம் திகதிகளில் கடலுக்கு மீன் பிடிப்பதற்கு செல்ல வேண்டாமென அறிவுறுத்தப்பட்டுள்ளது. மீன்பிடித் திணைக்கள பரிசோதகர் இத்தகைய அறிவுறுத்தலொன்றை கிண்ணியா பிரதேச பள்ளிவாயில்கள் மூலம் பிரதேச மீனவர்களுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

மேற்படி இரு தினங்களில் மீன்பிடித் திணைக்கள பரிசோதர்கள் கிண்ணியா பிரதேச மீனவர்களால் பாவிக்கப்படும் இயந்திர வள்ளங்கள், வலைகள் மற்றும் ஏனைய உபகரணங்களை பரிசோனைக்கு உட்படுத்தவுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர். இதற்கு ஒத்துழைப்பு வழங்காத மீனவர்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இதய நோயினால்..

இவருக்கு இதய நோய் இருந்ததாகவும் அதற்காக இரத்த மாற்றுச் சிகிச்சையினை திருமலைப் பொது வைத்தியசாலையில் பெற்றுக்கொண்டிருந்த போதே மாணவி மரணமானதாகவும் செய்திகள் வெளியாகி உள்ளன.

அவரது பெற்றோர்கள் இருவரும் ஆசிரியர்கள். தகப்பனார் நிலாவெளி மகாவித்தியாலயத்திலும், தாயார் சல்லி அம்பாள் வித்தியாலயத்திலும் கற்பிக்கின்றனர்.

# புதுவருடக் கொண்டாட்டத்தில் குழந்தையைக் கொன்ற பெற்றோர்!!!

புது வருடக் கொண்டாட்டத்தில் தமது முழுக்கவனத்தையும் செலுத்திய பெற்றோர் தமது நான்கு வயதுப் பாலகனை கவனிக்காது விட்டதால் மகிழுந்தினுள் (கார்) வைத்துப் பூட்டப்பட்ட அக்குழந்தை வெளியேறவோ சுவாசிக்கவோ வழியின்றி நான்கு வயது ஆண் மகவொன்று மரணத்தைத் தழுவிய பரிதாப நிகழ்வொன்று இவ்வருடம் இலங்கையில் பதிவாகியுள்ளது.

நீர்கொழும்பிலேயே இப் பரிதாபச் சம்பவம் நிகழ்ந்துள்ளது. தனியே விடப்பட்ட இக் குழந்தை மகிழுந்தினுள் ஏறி இருந்துள்ளது. அப்போது மகிழுந்தின் கதவுகள் பூட்டப்பட்டு விடவே குழந்தை வெளியேற முடியாமல் அலறியுள்ளது. புதுவருடக் கொண்டாட்டங்களிற் திளைத்திருந்த பெற்றோருக்கு சுமார் இரண்டு மணித்தியாலங்களின் பின்னே குழந்தை காணாமற் போயிருப்பது தெரியவந்துள்ளது.

குழந்தையைத் தேடிய போது குழந்தை மகிழுந்தினுள் சுவாசிக்கமுடியாது மரணித்துப் போயிருந்தது.

# புகையிரத நிலையத்தில் புத்தாண்டு நிகழ்வுகள்

இலங்கை இரயில்வே திணைக்கள திருகோணமலை நிலையத்தில் தமிழ் சிங்களப் புத்தாண்டு நிகழ்வுகள் கடந்த 20ம் திகதி சனிக்கிழமை மாலை இரயில்வே மைதானத்தில் இடம்பெற்றுள்ளது. இந்நிகழ்வில் இரயில்வே திணைக்கள ஊழியர்கள், உத்தியோகத்தர்கள் மற்றும் அவர்களின் குடும்ப அங்கத்தவர்கள் ஆகியோர் பங்கேற்றனர். இந் நிகழ்வினை இரயில்வே பொதுமுகாமையாளர் திரு. ஆரியரட்ண தலைமை ஏற்றிருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடமாகாணத் தேர்தல் திகதியைத் தீர்மானிக்கப்போவது சனாதிபதியின் சாத்திரக்காரனே!!!

வடமாகாணத் தேர்தல் இவ்வருடம் செம்டெம்பர் மாதம் நடைபெறும் என அறிவித்துள்ள சனாதிபதி தேர்தலுக்கான திகதியைத் தமது சாத்திரக்காரரே தீர்மானிப்பார் என சனாதிபதி தெரிவித்துள்ளார்.

வெலிஓயாவில் நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்து கொண்ட சனாதிபதி "எனக்கு வெற்றியளிக்கும் நேரத்தை எனது சாத்திரக்காரர் கூறுவார். அதனடிப்படையிலேயே தேர்தலுக்கான திகதியைத் நான் தீர்மானிக்க இருக்கின்றேன்" எனத் தெரிவித்தார். (ஸ்ரீ)

## அமெரிக்க உதவி 314000 டொலர்களால் குறைந்தது (ஸ்ரீ)

இராணுவக் கல்வி மற்றும் பயிற்சிக்கான சரவதேச உதவியில் இலங்கைக்கு வழங்கப்பட்டுவந்த உதவியில் சுமார் 64,000 அமெரிக்க டொலர்களை அமெரிக்கா குறைத்துள்ளது.

இதன்படி 2014ம் ஆண்டில் இலங்கை பெற்றுக்கொள்ளவுள்ள இராணுவக் கல்வி உதவித் தொகை 626,000 டொலர்களாக வரையறுக்கப் பட்டுள்ளது. 2013ம் ஆண்டில் 690,000 அமெரிக்க டொலர்களை உதவியாக இலங்கை பெற்றுக்கொண்டிருந்தது.

இலங்கைக்கான வெளிநாட்டு நிதி உதவியையும் 50,000 அமெரிக்க டொலர்களால் குறைத்துள்ள அமெரிக்கா தனது அபிவிருத்தி உதவியின் கீழும் 200,000 அமெரிக்க டொலர்களால் குறைத்துள்ளது.

# தேசமுரசு

## மாதம்பேயில் துப்பாக்கிப் பாகங்கள் மீட்பு "இதனால்தான் சொல்கிறேன் வடக்கில் இராணுவப் பிரசன்னம் தேவை"


### பிரிகேடியர் வணிகசூர்ய

வடக்கிலிருந்து கொண்டு வரப்பட்டதாகக் கருதப்படும் சுமார் முன்னூறுக்கும் அதிகமான துப்பாக்கிப் பாகங்கள் பழைய இரும்புக் கடையொன்றில் மீட்கப்பட்டதைத் தொடர்ந்து அதன் உரிமையாளர் கைதாகி நீதிமன்றின் பிணையுடன் விடுவிக்கப்பட்டுள்ளார்.

தம்மீது எவ்வித குற்றமும் இல்லை எனக் கடுமையாக மறுத்துள்ள இப் பழைய இரும்புக்கடை உரிமையாளர் தான் இலங்கையின் பல்வேறு பாகங்களில் இருந்தும் பழைய இரும்பினைப் பெற்று விற்கும் வர்த்தகத்தில் ஈடுபடுவதால் அவ்வாறு பெற்றுக்கொள்ளும் இரும்புப் பொருட்களுடன் இவை வந்து சேர்ந்திருக்கலாம் எனத் தெரிவித்துள்ளார்.

அவ்வாறாயின் எவ்வாறு இந்த ஆயுதப் பொருட்களை எல்லாம் ஒன்றாகச் சேர்த்து வைத்துள்ளீர்கள் என்று கேட்கப்பட்ட போது மிகத் தெளிவாக அவர் " எனக்குத் தெரியாது. அவை தானாகவே ஒழுங்குபடுத்தப்படும் போது ஒன்றாகி விட்டன" எனத் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் வணிகசூரிய தனது கருத்தைத் தெரிவிக்கும் போது " ஏ 9 வீதியில் ஒரேயொரு பரிசோதனைக் காவலரனே உள்ளது. அக்காவலரணைத் தவிர்த்து தெற்கிற்கு வரவேண்டுமாயின்



மன்னாரின் ஊடாகவோ அல்லது வில்பத்தின் ஊடாகவோ வரக்கூடியதாக இருக்கும். விடுதலைப் புலிப் போராளி கள் இறுதியுத்தத்தின் போது பெருமளவு ஆயதங்களை அங்கும் இங்குமாக வடக்கு முழுவதும் புதைத்துவிட்டுச் சென்றுள்ளார்கள் அதன் விளைவுகளே இவை எனத் தெரிவித்துள்ளார். இதனால்தான் வடக்கிலிருந்து இராணுவத்தை அகற்றக் கூடாது என நாம் வலியுறுத்துகின்றோம். வடக்கு இன்னும் முற்று முழுதாக ஆயுதக்களைவிற்கு உட்படவில்லை" என்றார் அவர்.

## இலங்கையரை நாடு திருப்பினார் சவூதி நபர்

சவூதி அரேபியாவில் சிறையில் இருந்து இரு இலங்கைப் பணியாளர்களை மீட்டு நாடு திருப்புவதற்கென சவூதி நபரொருவர் 22 ஆயிரம் சவூதி ரியால்களை வழங்கி உதவியுள்ளார்.

சவூதியில் வீடொன்றில் பணிபுரிந்த இலங்கையர் இருவர் தமது இடத்திலிருந்து தப்பிச் சென்று சவூதி தூதரகத்தில் தஞ்சமடைந்துள்ளனர். தம்மால் மீண்டும் பணிக்குச் செல்ல முடியாதென்றும் தம்மை நாட்டுக்கு திருப்பி அனுப்புமாறும் கோரிய இவர்களுக்கே குறித்த சவூதி நபர் பண வசதியைச் செய்து அவர்கள் மீண்டும் நாடு திரும்பும் வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்துள்ளார்.

## பிரித்தானிய விசா விண்ணப்ப நடைமுறைகளில் மாற்றம்

எதிர்வரும் மே ஆறாம் திகதி முதல் ஐக்கிய இராச்சியத்துக்கான விசா விண்ணப்ப முறைமையில் மாற்றம் ஏற்படுத்தப்படவுள்ளது.

ஐக்கிய இராச்சியத்தின் கொழும்பு உயர்ஸ்தானிகரகத்தின் இணையத்தளத்தில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி எதிர்வரும் 6ம் திகதி முதல் ஐக்கிய இராச்சியத்துக்கு செல்ல வேண்டிய விசா விண்ணப்பங்களை இணையத்தளத்திலேயே பூர்த்தி செய்யப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

இணைத்தளத்தில் வழங்கப்பட்டுள்ள புள்ளி அடிப்படையிலான இந்த விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்து அதன் பிரதியை ஐக்கிய இராச்சியத்தின் விசா மத்திய நிலையம் ஒன்றில் கையளிக்க முடியும்.

இதற்கு https://apply.ukba.homeoffice.gov.uk/iapply.portal என்ற இணைய முகவரிக்கு பிரவேசிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

## "தீர்த்த நாளான இன்று ஒரு நூல் கோர்த்த நாளானது"

*1981 ஆம் ஆண்டு தீர்த்தக் கரையில் அமரர் தம்பலகாமம் . க. வேலாயுதம் அவர்களால் பாடப்பட்ட தம்பலகாமம் ஆதி கோணநாயகர் கோயில் வரலாறு என்ற நூல் வெளியீட்டின் போது தாமரைத்தீவான் அவர்களால் பாடப்பட்ட பாவின் முதலிரு வரிகளிவை. இந்நிகழ்வின் போது நான் சிறுபிராயத்தவனாகையால் பின்னாளில் அப்பாடலை அப்பா வைத்திருந்த ஒலிப்பதிவில் இருந்தே கேட்டேன். தமிழ் அவர் நாவில் தவழும் விதமே அலாதியானது. அக்கவிவரிகள் இன்றும் எனக்கு அவர் குரலில் ஞாபகம் இருக்கிறது.*

அவரது உருவுக்கு ஏற்றபடி பொடிப்புலவன் என்னும் புனைப்பெயரையும் கொண்டிருக்கும் இவர் தமிழுக்குக் கிடைத்த பெருஞ்சொத்து. செம்மையும், தூய்மையும் நிறைந்த மரபுக்கவிதைகளுக்குச் சொந்தக்காரர். நாடறிந்த கவிஞர்.

சோமநாதர் - இராசேந்திரம் என்னும் இயற்பெயருடைய தாமரைத்தீவான் திருகோணமலை கிண்ணியாவிலுள்ள ஈச்சந்தீவு, தாமரைவில்லை பிறப்பிடமாகக் கொண்டவர். 24.07.1932 இல் பிறந்த இவரொரு ஓய்வு பெற்ற அதிபர். 1952 களில் இலக்கிய ஆக்கங்களில் ஈடுபாடு கொண்ட இவரது முதற் பாடல் 1956 இல் வெள்ளைப் பூனை என்னும் தலைப்பில் சுதந்திரனில் வெளிவந்தது.

அதைத் தொடர்ந்து அவரது படைப்புக்கள்



வீரகேசரி, தினகரன், சுடர், சிந்தாமணி, சூடாமணி, தாகம், சர்வதேச தமிழர், தமிழ் உலகம் முதலான இதழ்களில் வெளிவந்தது.

திருமலை மாவட்டத்தில் பல கவியரங்குகளின் நாயகனாக விளங்கிய, இயல்பாகப் பழகும் தன்மைகொண்ட இவர் ஆரவாரமின்றி சமூக சீர்திருத்தக் கருத்துக்களை தனதாக்கங்களில் விதைத்துச் செல்பவர்.

பிள்ளைமொழி (1992), கீறல்கள் (1992), கட்டுரைப் பத்து (1997), போரும் பெயர்வும் (1999), ஐம்பாலைம்பது (2001), வள்ளுவர் அந்தாதி (2002), முப்பத்திரண்டு (2004), சிறுவிருந்து (2004), சோமம் (2005), என் பா நூறு (2005), ஐந்தொகை (2005), இணைப்பு (2008), அன்பழைப்பு என்பன இதுவரை வெளிவந்த இவரது நூல்களாகும். இன்னும் பல நூலுருவாக்கம் பெறக்காத்திருக்கின்றன என அண்மையில் சந்தித்தபோது கூறினார்.

பல பாராட்டுக்களுக்கும், விருதுகளுக்கும் சொந்தக்காரரான இவருக்கு கலாபூஷணம் விருது 2005 இல் வழங்கப்பட்டது.

(த. ஜீவராஜ்)

## கலாவிநோதன் கலாபூசணம் அமரர் சித்தி அமரசிங்கம்

ஜீவராஜ்

*கடந்த வாரத் தொடர்ச்சி...*

எழுத்தாளராகிய அன்புமணி ஐயா அவர்கள் கூறுவது போல அவர் பெயரால் ஒரு நினைவுப்பணி மன்றம் அமைத்து அவர் மேற்கொண்ட பணிகளைத் தொடர்வதே நாம் அவருக்குச் செய்யக்கூடிய கைமாறாகும்.

***வானொலி நாடகங்கள்***

தொழிலுக்குத் தொழில், சோக்கிரடீஸ் போன்ற நாடகங்களை வானொலிக்காக தயாரித்திருந்தார். இவரது மேடை நாடகமான இராவண தரிசனம் பின்னர் இலங்கை வானொலியிலும் ஒலிபரப்பாகியது.

***கலைவாணி நாடக மன்றம்***

சித்தி அமரசிங்கத்தினால் உருவாக்கப்பட்ட கலைவாணி நாடக மன்றம் பின்வரும் நாடகங்களை மேடையேற்றியது.

- பழிக்குப்பழி • மனமாற்றம்
- புரடக்ஷன் நம்பர் 12
- Banda comes to town
- வேடன் கண்ணப்பா
- காணிக்கை • மலர் விழி
- இராவண தரிசனம் • ஹரிச்சந்திரா
- திருத்தப்படும் தீர்மானங்கள்

***மதிவளர் கலாமன்றம் சார்பில்***

- நந்திவர்மன் காதலி
- எல்லாம் காசுக்காக

போன்ற நாடகங்களை மேடையேற்றியுள்ளார்.

இவரது எழுத்துருவாக்கத்திலும் நெறியாள்கையிலும் மேடையேறிய பிற நாடகங்கள்

- கொப்பரணக் கோட்டுக்கிழுப்பான்
- ஸ்டுடியோவில் க்ரேசி போய்ஸ்
- அண்டல் ஆறுமுகம்
- சத்தியவான் சாவித்திரி
- ஊர்த்தவளைகள்
- சொன்னதைச் செய்வான்

அமரன் ஸ்க்ரீன் சார்பில் பின்வரும் நாடகங்களை மேடையேற்றியுள்ளார்.

- குத்துவிளக்கு
- சொப்பன வாழ்வில்
- யமனுக்கு யமன்

இவை மாத்திரமன்றி, கீழைத் தென்றல் கலாமன்றம், திருமறைக் கலாமன்றம் போன்றவற்றோடும் இவர் இணைந்து இயங்கியுள்ளார்.

பல சிங்கள நாடகங்களிலும், ஏனைய நாடகக்கலைஞர்களின் நாடகங்களிலும் இவர் பங்கேற்று நடித்துள்ளார்.

***வெளியிட்ட நூற்கள்***

• ஒற்றைப்பனை (சிறுகதைத் தொகுப்பு) • கோயிலும் சுனையும் (நாடகத் தொகுதி) • கயல் விழி (கவிதை நாடகம்) • சாரணர் புதிய செயற்றிட்டம் • 93கலை இலக்கிய ஆய்வு (கட்டுரைகள்) • இராவண தரிசனம் (இலக்கிய நாடகம்)
• கங்கைக் காவியம் (காவியம்)
• கழகப் புலவர் பெ.பொ.சி கவிதைகள் • சிந்தித்தால் (நற்சிந்தனைக் கதைகள்) • இரு நாடகங்கள் (நாடகம்)
• திருப்பல்லாண்டு • கவிதாலயம் (கவிதைத் தொகுப்பு) • அச்சாக்குட்டி (குழந்தை இலக்கியம்)
• நெஞ்சில் ஓர் நிறைவு (சிறுகதைத் தொகுப்பு) • காந்தி மாஸ்டர் சிறப்பு மலர் • கிழக்கில் பூத்த ஞான மலர்
• இலக்கியப் பூந்துணர் *முற்றும்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தம்பன் கோட்டை

பாகம் - 13

## வரலாற்று நாவல்

தம்பலகாமம் த. வேலாயுதம்

*சென்ற வாரம்...*

*இந்த ஒரே பாதையான சேனைவழிக்கல்வழி. பொதுவாக இது மாட்டு வண்டிப்பாதையாகவே அமைந்திருந்தது.*

இரண்டு ஊர்களையும் இக்கானக நெடுஞ்சாலை இணைத்து நின்றதால் இரண்டு ஊர்களதும் அரச நிர்வாகம் இவ்வழியின் இரண்டு மருங்குகளையும் இரு ஊரவர்க்கும் பங்கு வீதம் அளந்து கொடுத்து சுமார் ஐந்து முழ அகலத்திற்கு மரம் செடி கொடிகளை வெட்டியழித்து துப்பரவு செய்யப்பணித்திருந்ததால் இந்தப் பெரும் வனத்தில் பாதுகாப்பான பயணத்தை உறுதிசெய்ய எட்டு முழத்திற்கும் (25 அடிவரை) அதிக அகலமான இப்பாதைவழியில் பயணிகள் அச்சமின்றிப் போகக்-கூடியதாக இருந்தது.

காலத்திற்குக் காலம் வழியின் இருமருங்கும் ஐந்து முழ அகலம் என்று காடு வெட்டி துப்புரவு செய்திருந்தாலும் பாதையை ஒட்டி நின்ற பாலை, இலுப்பை போன்ற விருட்சங்களை விட்டு வைத்தும் இருந்தனர். எண்திசையும் கிளை விட்டு அங்கொன்றும் இங்கொன்றுமாக நிழல் தந்தவண்ணம் இம்மரங்கள் இருந்தன.

வழியில் இத்தகைய மரங்கள் இரண்டு ஒன்றாகி இருந்த இடத்தில் நிழல்போதுமானதாக இருந்ததால் ... குதிரைகளை ஓரமாகக் கட்டிவிட்டு அத்தனைபேரும் அமர்ந்து, கொண்டுவந்திருந்த புளிச்சாதத்தை சாப்பிட்டு சில கணங்கள் இருந்துவிட்டுப் புறப்பட்டனர்.

வேறெங்கும் நிற்காமல் சதுர்வேதமங்கலத்தை (கந்தளாய்) வந்தடைந்த உதயகுமரனையும், குதிரைப்படைவீரர்களையும் மகாநாட்டு நிர்வாகிகள் வரவேற்று அவர்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த விருந்தினர் விடுதியில் தங்கவைத்து, உடலில் படிந்திருந்த தூசியையும், வியர்வை-யையும் அகற்ற குளியலுக்கு ஏற்பாடு பண்ணிவிட்டு, மதிய உணவுக்கு ஏற்பாடு செய்வதாகக் கூறிச் சென்றனர்.

நாட்டின் நாலா புறமுமிருந்து கோட்டைத்தளபதிகள், படைவீரர்கள் என்று மட்டுமல்லாது மடாதிபதிகள், சமய அறிஞர்கள் வேதவிற்பன்னர்கள், யோகிகள், சமயப் பிரமுகர்கள், சைவப் பெருமக்கள் என்று திரள் திரளாய் வந்து சதுர்வேத மங்கலத்தை நிறைத்துக்-கொண்டிருந்தனர். அரோகரா ஒலிகளும், ஓம் உச்சாடனங்களும் எங்கும் ஒலித்தவண்ணம் இருந்தன.

அன்று மதியத்திற்கு பின்னர் பொலன்னறுவையிலிருந்து கலிங்க விஜயவாகு மன்னர் நால்வகைச் சேனைகளும் புடைசூழ, வாத்திய கோஷங்கள் முழங்க, அமர்க்களமாக சதுர்வேதமங்கலம் வந்தடைந்தபோது, உதயகுமரனும், ஏனைய தளபதிகள், அதிகாரிகளுடன் சென்று வணக்கம் செலுத்தினான்.

அன்று மாலையே விழா ஆரம்பிக்க ஏற்பாடுகள் செய்யப் பட்டிருந்ததால்... மன்னர் அதிகளவில் அதிகாரிகளுடன் ஆலோசனை கலக்காமல் ஒரு சில முக்கியமான கோட்டைகளின் தளபதிகளுடன் மட்டும் கலந்துபேசினார். அவர் உதயகுமரனின் முறை வந்தபோது, தம்பன் கோட்டையின் குறிப்புக்களைச் சொல்லி விபரங்கேட்டபோது, அவன் அசந்தே போனான். இத்தனை தெளிவாக கோட்டையின் மூலைமுடுக்குகள், பாதாள அறைகள், களஞ்சிய சாலை... சிறைக்கூடம் பற்றியெல்லாம் தெரிந்து வைத்திருக்கிறாரே... என்று வியந்தான். மறுகணம் இல்லையென்றால் பௌத்தர்களின் எதிர்ப்பையெல்லாம் பொருட்படுத்தாமல் ஆட்சி செய்ய முடியுமா என்று கலிங்கவிஜயபாகு சக்கரவர்த்தியின் ஆட்சிவண்ணத்தை மெச்சவும் செய்தான்.

வேளையானதும் மேள தாள சீர்களுடன் அரசர் மாநாட்டு மண்டபத்-துக்கு அழைத்துச் செல்லப்பட்டார். இங்கு இலங்கையிலிருந்து மட்டுமல்ல, இந்தியாவிலிருந்தும் கூட பல பாகங்-களிலிருந்தும் தவசிரேட்டர்கள், தத்துவ ஞானிகள், யோகிகள், வேதாகமப் பண்டிதர்கள், அரச பிரதிநிதிகள், தளபதிகள், பிரமுகர்கள், பொதுமக்கள் என்று வந்திருந்து மண்டபத்தை நிறைத்திருந்தவர்கள் மன்னரைக் கண்டதும் எழுந்து நின்று ஜயகோசம் எழுப்பி வரவேற்றது கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. மன்னர் தமக்கான சிம்மாசனத்தில் அமர்ந்ததும் சபையும் அடங்கியது.

விழா ஏற்பாட்டாளர்கள், சம்பிரதாயபூர்வமாக, மன்னரை விழித்து, தலைமை தாங்கி அம்மாநாட்டை ஆரம்பித்து வைக்குமாறு அவரிடம் பணிவாக வேண்டிக் கொண்டனர்.

கலிங்க விஜயபாகுச் சக்கரவர்த்தியும் எழுந்து, சபைக்கு வணக்கம் செலுத்திவிட்டு, குத்து-விளக்கேற்றி மாநாட்டை ஆரம்பித்து வைத்தார். ஆத்திசூடி பாடப்பட்டதும், மன்னர் மாநாட்டுப் பேராளர்கள் மத்தியில் பேசத்தொடங்கினார்.

கலீரென கம்பீரமான குரலில் பேசத்தொடங்கினார் மன்னர். சபை மகுடியில் கட்டுண்ட நாகம்போல கவனம் திரும்பாமல் செவிமடுக்க-லாயிற்று... தொடர்ந்து ஒவ்வொருவராக முறையெடுத்துப் பேசலாயினர். சமயஅறிஞர்கள், யோகிகள், வேதவிற்பன்னர்கள் என்று தாங்கள் கடைப்பிடிக்கும் தெய்வக் கொள்கைகளை விளக்கி உரையாற்றலாயினர். எல்லோரது பேச்சும் மன்னர் குறிப்பிட்ட உபநிடதக் கொள்கைகளை அனுசரித்துப் போவதாகவே அமைந்தன. இவ்வாறாக ஆரம்பித்த வேதாகம மாநாடு மூன்று நாட்களாக இடம்பெற்றன. இடையிடையே சமயக் கருத்துக்களை விளக்கும் நாடகங்கள், நடனங்கள், தெருக்கூத்துக்கள், சங்கீதக்கச்சேரிகள் என்று நாளுக்கு நாள் நிகழ்ச்சிகளால் மாநாடுகளை கட்டிக் கொண்டிருந்தது.

உதயகுமரனுக்கு மனம் எதிலும் ஓடவில்லை. அவன் சிந்தனையெல்லாம் குடமுருட்டியாறு, வெண்மணற்பரப்பு, ரங்கநாயகி ஆகியவற்றிலேயே நிலைத்திருந்தது. எப்படியாவது மன்னருடன் பேசி அவளை மணம்முடிக்க அனுமதி பெறவேண்டும் என்ற உறுதி அவனுக்குள் எழலாயிற்று.

மாநாட்டு நிகழ்வுகள் களியாட்டங்களுடன் நிறைவு பெற்றன.... சகலரும் மாநாட்டைப் பற்றியும், அதை ஏற்பாடு செய்த மன்னரைப்பற்றியும் புகழ்ந்தபடியிருந்தனர். அரசரும் மறுதினமே ராஜதானி திரும்ப ஏற்பாடுகள் நடைபெறுவதை அறிந்த கோட்டைத் தளபதிகள், அயல்நாட்டு பிரதிநிதிகள், பிரமுகர்கள் சக்கரவர்த்தியை வணங்கி சந்தித்து விடைபெற்று வணங்கிக் கொண்டு ஊர்களுக்கு திரும்பத் தொடங்கினார்கள்.

*தொடரும்...*

---

# இலங்கையின் இனப் பிரச்சினைகளும் மொழி உரிமைகளும்

சங்கீர்த்தனா

**இக்கட்டுரை.. மனித உரிமைகள் திணைக்களத்தினால் மொழி உரிமைகள் தொடர்பாக அகில இலங்கை ரீதியில் நடாத்தப்பட்ட போட்டியில் இரண்டாம் இடத்தை பெற்றுக்கொண்டது.**

1948 மாசி 04ம் திகதி சுதந்திரமடைந்த இலங்கையில் முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தன தொடங்கி இந்நாள் ஜனாதிபதி மேதகு மஹிந்த ராஜபக்ஷ வரை இன்னமும் தீர்க்கப்பட முடியாத பல பிரச்சினைகள் நிலுவையில் நிற்கின்றன. இனப் பிரச்சினை அன்று தொட்டு இன்று வரை ஒரு தாய் மக்கள்: எல்லோருக்கும் சம உரிமை உண்டு என்று வார்த்தையால் மட்டுமே விழிப்புணர்வு ஊட்டி வந்த அரசாங்கம் இன்னமும் கூட அதற்கு செயல் வடிவம் கொடுக்க மறந்து மறுத்து வருகின்றது.

பல்வேறு கால கட்டங்களில் பல்வேறு தரப்பட்டோர் ஆட்சிபீடம் ஏறுகின்றனர். பல்வேறு அரசியல் கட்சிகள் தேர்தல் அடிப்படையில் மக்களினால் தேர்வு செய்யப்-படுகின்றனர். ஆட்சிபீடம் ஏறும்போது மக்களின் பிரச்சினைகள் அனைத்தையும் தீர்த்து வைப்போம் என்று அவர்கள் வாய் வலிக்கவும் சொல்லி உள்ளனர். மக்களாகிய எங்களின் காது வலிக்கவும் கேட்டுள்ளோம். சில காலம் சென்றதும் மறந்து விடுகின்றனர்.

எந்த ஒரு அரசியல்வாதி தன்னைத் தானே தலைமைத்துவத்தின் கீழ் வழிநடாத்த தெரிந்திருக்கின்றானோ அவன்தான் மக்களையும் வழிநடாத்திச் செல்ல தகுதி உள்ளவனாக இருக்கிறான். வழிநடாத்துதல் அடி அத்திவாரத்தில் இருந்தே பலமானதாக இருக்க வேண்டும். இப்போது பல்வேறு தரப்பினரிடமிருந்தும், எல்லா மக்களிடமிருந்தும், உலக நாடுகளி-லிருந்தும் முணுமுணுக்கும் சொல் என்னவென்றால் இனப் பிரச்சினை.

65வது சுதந்திர தினம் வந்தே சென்று விட்டது. ஆனால் இன்னமும் கூட தீர்வையில் நிற்கின்றன இனப் பிரச்சினை. சுதந்திர தினம் கூட புதிதாக பிறக்கின்றது. ஆனால் இன்னமும் கூட சுதந்திர காற்றை அனுபவித்து சுவாசிக்க தமது மூக்கைக்கூட திறக்க முடியாமல் தவிக்கும் மக்கள் எத்தனை பேர்?...

எப்போதும் தினசரி செய்திகளிலும், பத்திரிகைகளிலும் இனப் பிரச்சினைக்கான தீர்வு வெகு விரைவில் கொண்டுவரப்படும் என்று எழுத்து மூலமும், வாய்ப்பேச்சு மூலமும் சொல்கின்றார்களே தவிர செயல்வடிவம் கொடுக்கக் காணோம். எத்தனையோ சட்ட மூலங்கள் நிறைவேற்றப்பட்டும், கோல்புறூக், குறுமக்கலம், மனிங், மனிங் டெவன்வியர், டொனமூர், சோல்பரி போன்ற யாப்புக்கள் கொண்டு வரப்பட்டும் இன்றும் சரி செய்யப்படாத நிலையில் இனப் பிரச்சினை உள்ளது.

மக்களுக்கு இருக்கும் அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப்படாமையும் அடிப்படை உரிமைகள் நிறை வேற்றப்படாமையுமே இனப் பிரச்சினைக்கு காரணமுமாக அமைகின்றன. இனப் பிரச்சினைக்கு இன்னுமொரு காரணம் மொழி உரிமை.

"ஒன்று பட்டால் உண்டு வாழ்வு" என்பது போல சாதி மத பேதமின்றி ஒன்றாக வாழ்ந்தது அந்தக் காலம். இப்போது எல்லாத்துக்கும் இனம், சாதி பார்த்தே காலம் குறைந்திருந்தாலும் மொழி உரிமை என்பது பாராபட்சம் இல்லாமல் திணிக்கப்பட்டுக் கொண்டுதான் உள்ளது. இந்தக் காலகட்டத்தில் மனிதன் ஏதோ ஒரு வகையில் மொழி உரிமையால் பாதிக்கப்பட்டுக் கொண்டு தன்னைத்தானே நொந்து கொண்டுதான் இருக்கிறான்.

இன்று உலகம் எவ்வளவுதான் நவீன யுகமாக மாறினாலும் மொழி என்பது அனைவருக்கும் முக்கிய-மானதாகும். தனி ஒருவனை அவன் பேசும் மொழியின் அடிப்படையில் இனங்கண்டு கொள்ளலாம். இலங்கையில் பரந்து வாழும் ஒவ்வொரு இனத்தவனுக்கும் அவன் அவன் மொழி என்பது முக்கியமானதும் இன்றியமை-யாததுமாக உள்ளது. ஆனால் இன்றைய கால கட்டத்தில் பேச்சு வழக்கில் அன்றாடம் நாம் பாவனையில் உள்ள மொழிகள் மொழி உரிமையுடன் சேர்ந்து அழிந்து கொண்டு வருகின்றது என்பதில் ஒரு ஐயப்பாடுமில்லை.

இனப் பிரச்சினைகள் முடிவுறாத நிலையில் நடந்து கொண்டிருந்தாலும் மொழி உரிமை என்ற துருப்புச் சீட்டை வைத்தே பல வழிகளில் இனப் பிரச்சினையை தூண்டுகின்றனர். ஒரே மக்கள், ஒரே இனம் எவ்வித பாகுபாடும் இல்லை எல்லோரும் இலங்கை மாதாவின் பிள்ளைகள் எனபதெல்லாம பேச்சு வழக்கோடு நின்றுவிட்டது. அன்று ஆங்கிலேயர் ஆட்சிக்கும் ஆங்கில மொழியின் ஆதிக்கத்திற்கும் இன்றைய தமிழ் மொழியின் நிலை அன்று ஒல்லாந்தரின் காலத்தில் ஆங்கில மொழிக்கு கிடைத்த உரிமை கூட இல்லாத நிலை.

எவ்வளவு சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், சுற்றறிக்கைகள் இருந்தாலும் அவற்றை அமுல்படுத்துவதற்கு அவசியமான விருப்பம், உணர்வு, கட்டுப்பாடு இல்லாவிட்டால் அவை மூலம் எதிர்பார்க்கப்படும் நோக்கங்கள் நிறைவேற்றப்பட மாட்டாது. ஒரு தேசிய இனம் என்ற வகையில் இப் பண்பு எமது தேசிய கலாசாரத்தின் அம்சமாகத் திகழ வேண்டும். இது இடம்பெற வேண்டுமானால் எமது மொழிப்பயன்பாடு, கல்வி, சட்டம் என்பன உரிய வகையில் சேர்ந்து செயற்பட வேண்டும்.

பதவி மைதானத்தில்
பலத்த போட்டி
இழுக்கப்பட்ட போது
அறுந்தது

ஒற்றுமைக்கயிறு என்றாகி விட்டது இன்றைய நிலை. கடந்த 04.02.2013 அன்று சுதந்திர தின வைபவம் திருகோணமலையில் நடந்தேறியது. எங்கும் மயான அமைதிதான் நிலவியதே தவிர மூவினத்தினுடைய ஒற்றுமையைக் காணக் கூட முடியவில்லை. மற்றும் தேசிய கீதம் இசைப்பது எந்த மொழியில் என்ற வாக்குவாதம் பாராளுமன்றத்தில் ஏதோ வரண்ட நிலத்தில் மழைத் திவலை தூவிச் சென்றது போல எமது ஜனாதிபதி அவர்கள் தமது சுதந்திர தின உரையை தமிழில் ஆற்றிச் சென்றார்.

*(தொடரும்)*

---

**சிறுவர் உரிமைகளைப் பாதுகாப்போம்**

**குற்றங்கள் நிகழும் பொழுதில் அழையுங்கள் தொலைபேசி எண்**

**1929**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முரசின் உலக வலம்

## வெனிசுலா கலவரத்தில் 7 பேர் பலி

வெனிசுலாவில் ஜனாதிபதியாக இருந்த சாவேஸ் புற்றுநோயால் மரணம் அடைந்ததைத் தொடர்ந்து அங்கு ஜனாதிபதி தேர்தல் நடந்தது.அதில் துணை ஜனாதிபதியும், சாவேசின் ஆதரவாளருமான நிகோலஸ் மதுரோ வெற்றி பெற்றார்.

இவர் தன்னை எதிர்த்து போட்டியிட்ட ஹென்ரிக் ரியேலை விட 1.5 சதவீத வாக்குகளே அதிகம் பெற்றுள்ளார். இதை ஹென்ரிக் ரியெல் ஏற்றுக் கொள்ளவில்லை. வாக்குகளை மறுஎண்ணிக்கை செய்ய வேண்டும் என வலியுறுத்தி வருகிறார்.


அவருக்கு ஆதரவாகவும் வெற்றி பெற்ற நிகோலஸ் மதுரோவுக்கெதிராகவும் நாட்டின் பல பகுதிகளில் ஹென்ரிக் கட்சியினர் போராட்டம் நடத்தி வருகின்றனர். போராட்டங்களின் போது மாணவர்களுக்கும் பாதுகாப்பு படை அதிகாரிகளுக்கும் இடையே பல்வேறு பகுதிகளில் மோதல் ஏற்பட்டு கலவரமாக மாறியது.

அப்போது நடந்த வன்முறையில் வர்த்தக நிறுவனங்கள் அடித்து நொறுக்கப்பட்டன, கார்களுக்கு தீ வைக்கப்பட்டன. இந்த கலவரங்களில் 7 பேர் உயிர் இழந்ததாகவும் 61 பேர் காயமடைந்ததாகவும் அந்நாட்டின் தலைமை அரசு சட்டத்தரனி தெரிவித்துள்ளார்.



## அழகாக இருந்ததால் திருவிழாவிலிருந்து வெளியேற்றப்பட்டனர் ஆண்கள்


சவூதி தலைநகர் ரியாத்தில் நடைபெற்ற கலாசார திருவிழாவின் போது ஐக்கிய அரபு அமீரகத்தைச் சேர்ந்த மூன்று பேர் மிகவும் அழகாக இருந்ததால் அவர்களை மத சட்டங்களை அமுல்படுத்தும் பொலிசார் நிகழ்ச்சியில் இருந்து வெளியேற்றினர் ரியாத்தில் வருடாந்திர கலாச்சார திருவிழா நடைபெற்றது. அப்போது பல்வேறு கூடாரங்கள் அமைக்கப் பட்டதுடன் பல்வேறு பிரதிநிதிகளும் நிறுத்தப்பட்டனர். ஐக்கிய அரபு அமீரக கூடாரத்தில் மத சட்டங்களை அமுல்படுத்தும் பொலிசார் அங்கு நின்று கொண்டிருந்த அமீரக பிரதிநிதிகளில் மூன்று பேரை அங்கிருந்து வெளியேற்றியுள்ளனர்.



அவர்கள் மூவரும் மிகவும் அழகாக இருப்பதாகவும், அதனால் அங்கு வரும் பெண்கள் அவர்கள் அழகில் மயங்கக்கூடும் என்று கமிஷன் உறுப்பினர்கள் அஞ்சினார்கள். இதையடுத்து தான் அவர்கள் அங்கிருந்து வெளியேற்றப்பட்டார்கள் என்று விழா ஏற்பாட்டு அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

## அழிந்து வரும் ஆண் இனம்!

உலகம் அழியப் போகிறது என்று அவ்வப்போது பரபரப்பு கிளம்புவது வாடிக்கை என்றாலும் தற்போது பகீர் பரபரப்பு ஒன்றை கிளப்பியுள்ளனர் அவுஸ்திரேலிய விஞ்ஞானிகள்.அதாவது உலகிலிருந்து ஆண் இனமே அழியப் போகிறதாம். அந்த அழிவு ஏற்கனவே தொடங்கி விட்டதாம். பெண்களுக்கு நிச்சயம் இது சந்தோசமான செய்தியாக இருக்க முடியாது.ஆனால் ஆண் இனத்தின் அழிவு ஏற்கனவே தொடங்கி விட்டதாக கூறுகிறார்கள் அவுஸ்திரேலிய விஞ்ஞானிகள். இந்தத் தகவலை பேராசிரியர் ஜென்னி கிரேவ்ஸ் என்ற பெண் விஞ்ஞானியே கூறியிருக்கிறார். இது குறித்து அவர் கூறுகையில், உலகின் பல்வேறு உயிரினங்கள் அழிவின் விளிம்பை அடைந்துள்ளன. அதில் ஒன்றாக ஆண் இனமும் சேர்ந்திருப்பது அதிர்ச்சியான தகவலாகும்.பொதுவாக பெண் பாலினத்தை நிர்ணயிப்பது எக்ஸ் குரோமோசம்கள் ஆகும். இதில் ஒரு குரோமோசோமில் 1000 ஜீன்கள் இருக்கும். அதேபோல ஆண் பாலினத்தை நிர்ணயிக்கும் ஒய் குரோமோசோமிலும், ஆரம்பத்தில் ஒரு குரோமோசோமில் ஆயிரம் ஜீன்கள் இருந்திருக்க வேண்டும்.



ஆனால், தற்போதைய ஆண்களின் குரோமோசோமில் ஏறத்தாழ 100 ஜீன்கள் வரை குறைந்துள்ளது. அதில் முக்கியமான ஜீன் எஸ்ஆர்ஒய் ஜீனும் அடக்கம். Male master switch என்று அழைக்கப்படும் இந்த ஜீன்தான் ஒரு குழந்தை ஆணா, பெண்ணா என்பதை நிர்ணயிக்கும் மிக முக்கியமான ஜீன் ஆகும்.தற்போதைய பெண்களுக்கு இரண்டு எக்ஸ் குரோமோசோம்கள் உள்ளன. ஆண்களுக்கு ஒரு ஒய் குரோமோசோம் மட்டுமே உள்ளது. இதனால் ஆண் இனத்தின் அழிவு ஏற்கனவே தொடங்கி விட்டதை அறியலாம்.

இருப்பினும் ஆண் இனம் முழுமையாக அழிவதற்கு 50 லட்சம் ஆண்டுகள் பிடிக்குமாம். அதுவரை பிரச்சனை இல்லை என்கிறார் ஜென்னி கிரேவ்ஸ். தற்போது சேகரிக்கும் டைனோசஸ் முட்டை மாதிரி, ஆண் விந்தணுவை சேகரித்து வைக்கும் வங்கிகள் அதிகமாகலாம். இல்லையென்றால் அறிவியல் இன்னும் பல நினைத்துப் பார்க்க இயலாத கண்டுபிடிப்புகளைத் தாலாம் என்று குறித்த விஞ்ஞானி தெரிவித்துள்ளார்

# ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சைக்கான பயிற்சிகள் - 12

பிரதீபா

1. அரச இலட்சனையில் பூ இதழ்களால் சூழப்பட்டு கையில் வாளுடன் நிற்கும் சிங்கம் குறிப்பது எது?
   1. தார் மீகத்தை 2. நிலைத்திருப்பதை
   3. நாட்டையும் மக்களையும்
2. நிலத்தில் பல்வேறு கழிவுப் பொருட்களை உக்கல் அடையச் செய்பவை?
   1. காகம், நுண்ணங்கி 2. காகம், கறையான்
   3. மண்புழு, கறையான்
3. கீழ் உள்ளவற்றில் நோயிலிருந்து பாதுகாப்பு வழங்குவது எது?
   1. பசளி 2. பருப்பு 3. கருப்பட்டி
4. எல்லா முலையூட்டிகளிற்கும் பொதுவான இயல்பு
   1. நிலத்தில் வாழ்தல் 2. பாலூட்டுதல் 3. குட்டி ஈனுதல்
5. மாலை 4 மணியளவில் நான் பாடசாலையில் இருந்து வீட்டுக்குத் திரும்பி வரும் போது எனது நிழல் என்னை பின் தொடர்ந்து வந்தது. எனின் நான் செல்லும் திசை யாது?
   1. மேற்கு 2. தெற்கு 3. கிழக்கு
6. ஒரு கூடையில் இருந்த நான்கு அப்பிள் பழங்களைத் தவிர ஏனையவை வேறு பழங்களாகும். நான்கு தோடம் பழங்களைத் தவிர ஏனையவை வேறு பழங்களாகும். நான்கு மாம்பழங்களைத் தவிர ஏனையவை சேறு பழங்களாகும். எனின் கூடையில் இருந்த பழங்களின் மொத்த எண்ணிக்கை யாது?
   1. 12 2. 3 3. 24

*பின்வரும் தகவலை வாசித்து கீழ்வரும் வினாக்களுக்கு விடையளிக்குக. ஒரு வகுப்பில் உள்ள நான்கு மாணவர்கள் பிறந்த 4 மாணவர்களின் பிறந்த தினங்கள் கீழே தரப்பட்டுள்ளன.*

அமலி - 2000.07.08 கமலி - 2002.08.08 ரேவதி - 2001.09.15 சுமதி - 2001.10.16

7. இவர்களில் வயது கூடியவர் யார்?
   1. சுமதி 2. அமலி 3. கமலி
8. இவர்களில் வயது குறைந்தவர் யார்?
   1. ரேவதி 2. அமலி 3. கமலி
9. வயதின் அடிப்படையில் இறங்குவரிசையில் எழுதினால்?
   1. கமலி, ரேவதி, சுமதி, அமலி 2. அமலி, சுமதி, ரேவதி; கமலி
   3. அமலி, ரேவதி, சுமதி, கமலி
10. டெங்கு நுளம்பு தெளிந்த நீரிலேயே முட்டையிடும்
    1. இது எப்போதும் உண்மையானது 2. இது பெரும்பாலும் உண்மையானது
    3. இக்கூற்று பொய்யானது
11. கீழே காணப்படும் வாக்கியங்களுள் மிகச் சரியான கருத்தைத் தரும் வாக்கியத்தைத் தெரிவு செய்க.
    1. நீரை நிறையப் பருகுவதால் நோய்கள் குறையும்
    2. கொதித்தாறிய நீரைப் பருகுவதனால் நீர் நோய்கள் குறையும்
    3. கொதித்தாறிய நீரைப் பருகுவதனால் நோய்கள் குறையும்
12. நேசன் ஓர் பாடசாலைக்கு அண்மையில் வசித்து வந்தான். எனினும் அவன் அப்பாடசாலைக்குச் செல்லாமல் சற்றுத் தொலைவில் உள்ள பாடசாலைக்கே சென்று வருவான். இதற்கான காரணமாக இருக்கக் கூடியது எது?
    1. பாடசாலைக்கு பேரூந்து இன்மையினால்
    2. அப்பாடசாலை பெண்கள் பாடசாலை ஆகிய காரணத்தால்
    3. அப்பாடசாலையில் ஆசிரியரிகள் இன்மையினால்.
13. மீனு, தியானாவை விட முப்பது வயது மூத்தவள். இருவரினதும் பிறந்ததினம் சித்திரை 12 ஆகும். இவ்வருடம் தியானாவிற்கு 25 வயது எனின், அடுத்த வருடம் மீனுவின் வயது யாது?
    1. 56 2. 26 3. 55
14. ஒரு கடிகாரம் தினம் ஒரு மணித்தியால நேரத்தை பிந்திக் காட்டும். இரு நாட்களுக்கு முன் சரியான நேரமான நண்பகல் 12.00 யைக் காட்டியது. எனின், இக்கடிகாரம் இன்று நண்பகல் 12.00யை எவ்வாறு காட்டும்?
    1. மு.ப 12.00 மணி 2. மு.ப 11.00 மணி 3. மு.ப 10.00 மணி
15. நீர்த்தாங்கியொன்றை நிரப்புவதற்கு ஒரு நிமிடத்தில் 25லீ நீரை நிரப்பும் குழாயும், இரண்டு நிமிடத்தில் 60லீ நீரை நிரப்பும் குழாயும் பொருத்தப்பட்டுள்ளன. இரு குழாய்களையும் ஒரே நேரத்தில் திறந்து விட்டால், 10 நிமிட நேரத்தில் எவ்வளவு நீரை நிரப்பும்?
    1. 850லீ 2. 550லீ 3. 500 லீ
16. சுபாவின் நிறையின் இரு மடங்கு நிறையுடையவர் அனுலா. அனுலாவின் அரை மடங்கு நிறை உடையவர் லவன். லவனை விட இரு மடங்கு நிறையுடையவர் வீமா. அனுலாவின் நிறை 30கிலோ எனின், வீமாவின் நிறை யாது?
    1. 15கிலோ 2. 20கிலோ 3. 30கிலோ
17. 416 தோடம்பழங்கள் நான்கு பெட்டிகளில் சமமாக அடைக்கப்பட்டது எனில், ஒரு பெட்டியிலுள்ள தோடம்பழங்கள் எத்தனை?
    1. 14 2. 114 3. 104

பெயர்: ..........................................................................
..........................................................................
முகவரி: ..........................................................................
..........................................................................
..........................................................................
பாடசாலை: ..........................................................................

## தரம் ஐந்து மாணவர்களுக்கான புலமைப் பரிசிற் போட்டி

மேலுள்ள கேள்விகளுக்கான சரியான விடைகளை குறித்து அனுப்பி வாராந்தம் பரிசில்களை வெல்லுங்கள்.

மேலுள்ள கேள்விப் பகுதியை நிரப்பி வெட்டி அதனை மலைமுரசு, இல 159 A, கடல் முக வீதி திருக்கோணமலை என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள். வாராந்தம் பரிசுகளை வெல்லுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளியுறவுக் கொள்கையின் ஓட்டை ஊடே உட்புகுமா தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு....?

மாயன்

இலங்கையின் வெளியுறவுத்துறையின் வினைத்திறனை தெரிந்து கொள்ள ஈழத் தமிழர்கள் விடயம்தான் அளவு கோலாக உள்ளது.

ஈழத் தமிழரின் விடயத்தை முன்னிறுத்தியே இலங்கையின் அனைத்து நடவடிக்கைகளும் ஆராயப்படவோ அல்லது முன்மொழியப்படவோ செய்கின்றன. இப் பண்பு சுமார் 40 வருடங்களுக்கு முன் ஆரம்பமாகி விட்டது.

அதனடிப்படையிலேயே இலங்கையின் வெளியுறவுத்துறையின் ஆற்றலை அளவிடும் அளவு கோலாகவும் ஈழத் தமிழரின் விடயம் முன் நிற்கின்றது.

வெளியுறவுகள் ஏன் அவ்வளவு முக்கியத்துவம் பெறுகின்றன என நாம் சிந்திக்கலாம். முக்கியமாக ஈழத்தமிழரின் உரிமைக் கோரிக்கைகளை வென்றெடுப்பதற்குத் தேவையான பலத்தை இப்போது நாம் உள்ளக ரீதியாகக் கொண்டிருக்கவில்லை என்ற கடும் கசக்கும் உண்மையைப் புரிந்து கொள்ளத்தான் வேண்டும்.

2009ம் ஆண்டிற்கு முன் ஈழத்தமிழரின் விடயத்தைத் தீர்மானிக்கும் உள்ளக சக்தியாக , அது பலமாகவும் பலவீனமாகவும் இருந்தாலும், விடுதலைப் புலிகளே இருந்தார்கள் என்பது மறுக்கமுடியாத உண்மை. அவர்கள் தம்மை அவ்வாறே வளர்த்துக் கொண்டார்கள் என்பதையும் அதனைப் பங்குபோட்டுக்கொள்ள எவர் உருவாகினாலும் அவர்கள் அழிக்கப் பட்டார்கள் என்பதும் காலம் கற்றுத் தந்த பாடங்களுள் ஒன்று.

ஆனால் 2009ம் பின், சுமார் 20 வருடங்களாக அவர்களால் கட்டிக்காக்கப்பட்ட உள்ளகப் பலம் அழிவடைந்த பின், தற்போது வரைக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் முழுப் பலத்துடன் உள்ளக அரங்கில் எழும்பமுடியாது இருப்பதும் உண்மை. இவ் இரு உறைக்கும் உண்மைகளின் பிண்ணனியில் தற்போதைக்கு வெளியுறவுப் பலத்தினால் தான் இலங்கைத் தமிழரின் உரிமைக் கோரிக்கைகளை அழுத்திச் சொல்லும் களம் காணப்படுகின்றது.

வெளியுறவினை வளர்த்துக் கொள்வதில் பின்பற்றப்பட வேண்டிய சாணக்கியத்துவம் இரண்டு வகைப்படுகின்றது.

நாம் எமக்கான வெளியுறவினை வளர்த்துக் கொள்ளுதல் முதலாவதாகவும் எமக்கு எதிரான அணியின் பலவீனத்தினைச் சரியாகப் பயன்படுத்தி நாம் குளிர் காய்தல் என்பது இரண்டாவதாகவும் அமைகின்றது.

ஈழத் தமிழரின் வெளியுறவு விருத்திக்கு மிகத் தடையாக இருப்பது இந்தியா தான். இந்தியாவைத் தாண்டி வெளியுறவை வளர்த்துக் கொள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் முடியாமல் தான் இருக்கின்றது. தற்காலத்தில் அவ்வாறு வேறு நாடுகளுடன் உறவினை வளர்த்துக் கொள்வதும் அவ்வளவு நல்லதாகவும் தெரியவில்லை. ஏனெனில் ஆசிய வல்லரசுகளில் முன்னிலை வகிக்கும் சீனா மற்றும் இந்தியாவைத் தாண்டி எந்த மேற்குலகும் நேரடியாக இலங்கைக்குத் தன் ஆதரவுக் கரத்தை நீட்ட முயற்சிக்காது. அதற்கு அடிப்படையாக இருப்பது இவ்விரு நாடுகளினதும் பொருளாதாரங்களாலேயே மேற்குலகும் பெரும் வர்த்தக இலாபங்களை ஈட்டிவருவதாகும். எனவே இவ்விரு பெரும் பொருளாதார நாடுகளைத் தாண்டி மேற்குலகிற்குச் செல்தல் என்பது பூகோலப் பண்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்குச் சாத்தியமற்றதாக தற்காலத்தில் உள்ளது.

அத்துடன் சீன அரசானது சனநாயகப் பண்புகள் குறைந்த இராணுவ அரசாக இருப்பதால் பெரும் சனனாயகப் பண்பைக் கொண்டுள்ள இந்தியாவையே மேற்குலகு தென் ஆசிய நாடுகளுக்கான இடைச் செயற்பாட்டாளராக நோக்குகின்றது. எனவே இந்தியாவைத் தாண்டித் தனது வெளியுறவினை வலுப்படுத்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு வாய்ப்புக்கள் தற்போதைக்கு இல்லை.

அதனால் இரண்டாவது சாணக்கியமான இலங்கையின் வெளியுறவுத்துறைச் செயற்பாட்டின் பலவீனத்தில் புகுந்து செயற்பட்டு தமக்கான ஆதரவைத் தரணியெங்கும் திரட்டிக் கொள்ளும் வாய்ப்புக் கனிந்துள்ள நேரமாக இக் காலம் அமைந்துள்ளது.

இலங்கையின் வெளியுறவுத் துறை பலவீனப்பட்டுப் போயிருக்கின்றதா என்பதை புரிந்து கொள்ள அத் துறையின் செயற்பாட்டை இரண்டு காலப் பிரிப்பிற்குள் உடைத்துப் பார்க்கலாம். அக்காலப் பிரிப்பானது 2009ற்கு முன் - 2009ற்குப் பின் என்று உடைத்துப் பார்ப்போம்.

2009ற்கு முன்னரான காலப்பகுதியில், 1984ம் ஆண்டில் இலங்கைக்கு எதிரான முதலாவது முன்மொழிவொன்று மனிதவுரிமைச் சபையில் கொண்டுவரப்பட்டது. அதற்கு 1983ம் ஆண்டின் இனக் கலவரமும் கறுப்பு ஜூலையும் காரணமாய் அமைந்தன. பின்னர் தொடர்ந்த படுகொலைகளால் 1987லிலும் ஓர் முன்மொழிவானது ஜக்கிய நாடுகளின் மனிதவுரிமைச் சபையில் முன்மொழியப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

ஆனால் அதற்குப் பின் இலங்கைக்கு வெளியே உலக அரசியற் களத்தில் இலங்கை மீது எவ்வித பழிச் சொல்லையும் விழாது காத்து நின்ற மறைக்கரத்திற்கு முழுப் பொறுப்பானவர் மதிப்பிற்குரிய லக்ஸ்மன் கதிர்காமர் தான். இவர் 1994ல் வெளிவிவகார அமைச்சைப் பொறுப்பேற்றவுடன் இலங்கையின் வெளிவிவகாரத்துறை சிறப்பான செயற்பாடுகளில் முன்னிலை வகித்ததுடன், விடுதலைப் புலிகள் அமைப்பினால் பேணப்பட்டுவந்த வெளிவிவகாரக் கொள்கைகளின் பலவீனங்களில் திரு. கதிர்காமர் குளிர்காயத் தொடங்கிவிட்டிருந்தார்.

அதற்காக அவர் பாவித்த மிகப் பெரிய ஆயுதம் இந்திய அரசின் அனுசரணையே. 1987ம் ஆண்டில் இலங்கைக்கு எதிராக ஐ.நா. வில் செயற்பட்ட இந்தியாவை 1990ன் பின் இலங்கையின் முழு ஆதரவு நாடாக மாற்றியவர் அவர். இவ் 1987-90 காலப்பகுதியில் இலங்கைத் தீவில் இந்திய அமைதிப்படைச் செயற்பாடுகளும் அதனை எதிர்த்த விடுதலைப் புலிகளின் தாக்குதல்களும் இலகுவாகக் கதிர்காமரும் ஏனைய வெளிவிவகார அமைச்சர்களும் இந்திய அரசைத் தம்பக்கம் கவர்ந்து கொள்ள ஏதுவாகிப் போயிருந்தன.

அத்துடன் அக்கால கட்டத்தில் இலங்கையில் நடந்த படுகொலைகளை சர்வதேச அரங்கில் இலங்கையின் வெளிவிவகாரத்துறை ஏற்றுக்கொள்ளத் தயங்கவே இல்லை என தலைசிறந்த மனிதவுரிமைச் செயற்பாட்டாளரான ச.வி.கிருபாகரன் தனது கட்டுரையொன்றில் தெரிவித்திருந்தார். அவ்வாறு நடந்த படுகொலைகளை ஏற்றுக் கொண்ட இலங்கையின் வெளியுறவுத்துறை அக் கொலைகளை விடுதலைப் புலிகளே செய்தார்கள் என்பதைச் சர்வதேச அரங்கில் எவ்வாறோ நிரூபித்துக்கொண்டே இருந்தார்கள். அல்லது யார் செய்தார்கள் என்ற சந்தேகத்தை ஏற்படுத்தி விட்டிருந்தார்களே யொழிய அரச படைகளின் மீது எந்த முக்கிய நாடும் சுட்டுவிரலை நீட்டாதவாறு பார்த்துக் கொண்டார்கள் என்பதே அவர்களது வினைத்திறனான செயற்பாடாக இருந்தமைக்குச் சான்றாக இருந்தது.

இவ் 2009ற்கு முற்பட்ட காலப்பகுதியில் தான் பெரும்பாலான முக்கிய உலக நாடுகள் யாவும் முக்கியமாக இந்தியா, அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் உட்பட கனடா கூட இலங்கை ஆதரவுக் கொள்கைகளைக் கொண்டமைந்திருந்தன.

2009ம் வெற்றிக் கொண்டாட்டத்தின் பின்னர் இலங்கையின் வெளியுறவுத்துறை கடும் சரிவை எதிர்கொள்வதைக் அனைவரும் புரிந்து கொள்ள முடிகின்றது. அதன் மிக முக்கிய குறிகாட்டியாக 2009ற்கு முன் ஆதரவளித்த முக்கிய நாடுகள் அனைத்தும் இலங்கைக்கு எதிராகச் செயற்படத் தொடங்கிவிட்டதைக் கொள்ளலாம்.

ஏப்ரல் 14ம் திகதி வெளியான சண்டே டைம்ஸ் ஆங்கிலப் பத்திரிகையின் 12ம், 13ம் பக்கங்களின் தகவல்களிலிருந்து இலங்கையின் அமெரிக்க உறவு சம்பந்தமான முக்கிய தகவல் ஒன்றைப் பெற்றுக்கொள்ள முடிந்துள்ளது. அச் செய்தியின் படி அமெரிக்காவிலுள்ள வாசிங்டன் இல் அமைந்துள்ள இலங்கைத் தூதரகம், இலங்கை மத்திய வங்கியின் அனுமதியுடன் அமெரிக்காவில் உள்ள ஆலோசனை நிறுவனமொன்றிற்கு மாதாந்தம் 116,600 டொலர்களையோ அல்லது அதற்கு மேலதிகமாகவோ செலுத்தும் ஒப்பந்தமொன்றைச் செய்துள்ளன எனத் தெரிவிக்கின்றது.

இவ் ஒப்பந்தமானது இலங்கை அமைச்சரவையின் அங்கீகாரத்தையோ அல்லது வெளிவிவகார அமைச்சின் அனுமதியையோ பெற்றுக் கொள்ளவில்லை என்றும் அச் செய்தி மேலும் தெரிவிக்கின்றது.

இவ் ஒப்பந்தம் ஏன் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றால் இலங்கைக்கும் அமெரிக்காவிற்கும் இடையிலான உறவினை சரியாகக் கட்டியெழுப்புவதற்காகவே.

இச்செய்தியின் ஊடாக இரண்டு விடயங்களை இலங்கையின் வெளியுறவுத்துறை தொடர்பாகப் புரிந்து கொள்ள முடியும்.

முதலாவது இலங்கைக்கும் அமெரிக்காவிற்குமான உறவானது மிக நலினப்பட்டுப் போயிருப்பதுடன் அவ் உறவைக் கட்டியெழுப்பும் திராணியை இலங்கை வெளியுறவுத்துறை அமெரிக்காவில் இழந்துள்ளது என்பதாகும்.
இரண்டாவதாக இலங்கையின் வெளியுறவுத்துறை நேரடியாக தேவையான நாடுகளுடன் உறவுகளை ஏற்படுத்தும் வலுவற்றிப்பதைச் சுட்டியும் நிற்கின்றது.

இலங்கையின் வெளியுறவுத் துறையின் தற்போதைய கட்டமைப்பைப் புரிந்து கொண்டால் அதன் கேவலத் தன்மையையும் கண்டுகொள்ள முடியும். இலங்கையின் வெளியுறவுத்துறை அமைச்சர் கலாநிதி ஜி.எல். பீரிஸ். எனினும் ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைச் சபையில் இலங்கையைத் தலைமை தாங்கும் வலு அவருக்கில்லை. அதனால்தான் அச் சபையின் அமர்வுகளுக்கு அமைச்சர் மகிந்த சமரசிங்க தலைமை தாங்கினார்.

இவர்கள் அனைவரையும் அவதானிப்பதற்கு சனாதிபதியால் நியமிக்கப்பட்ட தனிப்பட்ட மேற்பார்வையாளராக பாராளுமன்ற உறுப்பினர் சஜின் வாஸ் குணவர்த்தன.

எனவே பலவீனப்பட்டுப் போயிருக்கும் இலங்கையின் வெளியுறவுத் துறையால் மேலும் மேலும் எதிரி நாடுகளை உருவாக்க முடிவதை நாம் காணலாம்.

சரி இங்குதான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கான வெளியுறவுக் களம் தானாகவே திறந்து கிடக்கின்றது. இரண்டாவது சாணக்கியமான இலங்கையின் பலவீனத்தினுள் புகுந்து செயற்பட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தன்னை வலுப்படுத்திக் கொள்ள வேண்டும்.

தற்போது உள்நாட்டில் நடைபெறும் அனைத்து அடக்குமுறைகளையும் பாகுபாடின்றி உலகத் தரப்பிற்குத் தெரியப்படுத்த வேண்டும். மிகமுக்கியமான செய்திகள், முக்கியமான செய்திகள், முக்கியமற்ற செய்திகள் என்ற பேதங்களின்றி தமிழரைப் பாதிக்கும் எல்லா விடயங்களையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உலகிற்கு எடுத்துச் செல்ல வேண்டும். அதற்காகப் பக்கம் சாராச் செய்திப் பிரிவினை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனக்காக எற்படுத்திக் கொள்ள வேண்டும்.

அவ்வாறு ஏற்படுத்திக் கொள்ள வேண்டுமாயின் ஒவ்வொரு பிரதேசத்திலும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் மீதான நம்பிக்கையைப் பலப்படுத்த வேண்டும். இவ்விடயத்தில் தற்போதும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்நாட்டில் பலமற்றுப் போய்க் கிடக்கின்றதைக் காணலாம். தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இருக்கின்ற திருகோணமலை மாவட்டதிலேயே தமிழர்களின் நிலை கவனிப்பாரற்றுக் கிடக்கின்றது. இந்த வாரம் அலஸ் தோட்ட மக்கள் மசாஜ் விடுதியொன்றைச் சுற்றிவளைத்து அதனைக் கைப்பற்றி அகற்ற வேண்டும் என்ற போராட்டத்தினை முன்னெடுத்த போது அதனைக் கண்டுகொள்ளாது தற்போதுவரை தமிழ்த் தலைமை உள்ளது.

எனவே சிறிய பொறிகளைப் பற்றிக் கொண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்நாட்டில் பலம் பொருந்திய தகவல் வலைப்பின்னலைக் கட்டமைத்துக் கொள்ள வேண்டும்.

அத் தகவல் வலைப் பின்னலைக் கொண்டு இலங்கையில் நடைபெறும் அனைத்து விடயங்களையும் வெளிநாடுகளுக்கு உடனுக்குடன் உத்தியோக பூர்வமாக வெளிப்படுத்த வேண்டும்.

அடுத்து வெளிநாட்டு வலைப்பின்னலை உறுதிப்படுத்தும் செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும். அனைத்து நாடுகளிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உத்தியோக பூர்வ இல்லங்கள் அமைக்கப்பட்டு அவர்களின் ஊடாக அந்தந்த நாடுகளின் இராசதந்திரிகளுடன் தொடர்புகளை உருவாக்க முயற்சிக்க வேண்டும். அவ் உறவு தான் பலவீனப்பட்டுள்ள இலங்கையின் வெளியுறவை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கான பலமாக மாற்றும் இவை ஒரே நாளில் நடைபெறும் சாத்தியமற்றவையே. ஆனால் யுத்தம் முடிந்த நான்கு ஆண்டுகளில் இவை சாத்தியப் பட்டிருக்கும்..............

..................... ஆரம்பிக்கப் பட்டிருந்தால்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புல்மோட்டையில் பெற்றோர்கள் படுகொலை..

ஓரினப் பால் உறவுக்குத் தடைவிதித்தார்கள் என்ற காரணத்தால் தனது வளர்ப்புத் தந்தையையும் தாயையும் அவர்களது சொந்த மகளுடன் சேர்ந்து வெட்டிக் கொலை செய்த செய்தி வெளியாகியுள்ளது.

புல்மோட்டையிலிருந்து 15 கிலோமீற்றர்கள் தொலைவிலுள்ள மஹசேனபுர கிராமத்திலேயே இக் கொலைகள் நிகழ்ந்துள்ளன. கடந்த 21ம் திகதி இரவில் நிகழ்ந்த இக் கொலைகளால் ஊர்காவல் படையைச் சேர்ந்த எச்.எம் சூரியபண்டார என்ற 38 வயதுடைய ஆணும் ஜீவனி அனுராதிகா என்ற 36 வயதுடைய பெண்ணுமே கொலை செய்யப் பட்டுள்ளனர். அவர்களது உடலங்கள் வீட்டிற்கு வெளியே கிடந்ததைக் கண்ணுற்ற அயலவர்கள் புல்மோட்டைக் காவல்துறையினருக்குச் செய்தியைப் பரிமாற்றிய பின்னரே உண்மைகள் வெளியாகத் தொடங்கியுள்ளன. துரிதமாகச் செயற்பட்ட காவல்-துறையினர் கொலையாளிச் சந்தேகநபரையும் அவருக்கு உடந்தையாக இருந்ததாக கருதப்படும் கொல்லப்பட்டவரின் மூத்த மகளான 15 வயதான நிமாலி பிரியதர்சினியையும், அவரது சகோதரியான 8 வயதுடைய செவ்வந்தி பிரயதர்சினியையும் ஜாஎல பிரதேசத்தில் வைத்துக் கைது செய்துள்ளனர்.

கொலையாளிச் சந்தேக நபரான பெண் உண்மையில் ஆண் நடத்தைகளைக் கொண்டிருந்ததாக எமது செய்தியாளர் தெரிவித்தார். அவ் ஆண் நடத்தை கொண்ட பெண்ணுக்கும் கொல்லப்பட்டவரின் மூத்த மகளுக்குமிடையே ஓரினப் பால்புணர்ச்சி உறவிருந்ததாகவும் அதனைக் கண்டித்த பெற்றோரைக் கொலை செய்ததாகவும் ஆரம்பக்கட்ட விசாரணைகள் வெளிச்சமிட்டுள்ளன.

எனினும் தத்தெடுத்து வளர்க்கப்பட்ட அந்த உறவுக்காரப் பெண் தன்னைக் கொல்லப்பட்ட இருவரும் பாலியல் அடிமையாகப் பயன்படுத்தி வந்ததாக தெரிவித்துள்ளதாக நம்பகமற்ற தகவல் கிடைத்துள்ளது.

சந்தேக நபர்களை விளக்கமறியலில் தனித்தனியாக அடைத்து வைக்கும்படி நீதிபதி உத்தரவிட்டுள்ளதாக தெரிகின்றது.

காவல்துறை விசாரணைகள் தொடர்கின்றன.

## இனவாதத்துடன் செயற்படுபவர்..

செயலர் நிகழ்த்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. அச் சந்திப்பின் போது தேசிய ஜம்யத்துள் உலமா சபை பொதுபலசேனா அமைப்புடன் நடாத்திய பலசுற்றுப் பேச்சு வார்த்தைகளின் பின்னர் அவர்களிடையே எட்டப்-பட்டுள்ள உடன்பாட்டை கிழக்கிலங்கை மக்களுக்கு சரியாக எடுத்துச் செல்பவர்களாக ஜம்யத்துள் உலமா சபையினர் செயற்பட வேண்டும் என பாதுகாப்புச் செயலர் கோரியிருந்தார் என திருமலை ஜம்யத்துள் உலமாசபைத் தலைவர் தெரிவித்திருந்தார்.

இக் கலந்துரையாடலின் போது அகில இலங்கை ஜம்யத்துள் உலமா மற்றும் பொதுபலசேனா ஆகிய இரண்டு அமைப்புக்களாலும் ஏற்றுக்-கொள்ளப்பட்ட தீர்மானங்களை தெரியப்படுத்திய பாதுகாப்புச் செயலர் "ஏற்றுமதிப் பொருட்களுக்கு மட்டுமே இனிவரும் காலங்களில் ஹலால் சான்றிதழ் ஜம்யத்துள் உலமா சபையால் வழங்கப்படும் என்பதுடன் அதற்காகக் கட்டணங்கள் எவற்றையும் ஜம்யத்துள் உலமா அறவிடாது'' எனவும் தெரிவித்திருந்தார். இவ்வாறு சான்றிதழ் வழங்குவதற்கு ஏற்படும் செலவினை இலங்கைவாழ் முஸ்லிம் வர்த்தகர்கள் ஏற்றுக்கொள்வர் என்றும் தெரியப்-படுத்தியிருந்த அவர் கிழக்கில் வாழும் பெரும்பான்மைச் சமூகங்கள் ஆர்ப்-பாட்டங்கள் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டால் அவை சிறுபான்மைச் சமூகங்களின் இயல்பு வாழ்வுக்கு அச்சுறுத்தலாக அமைந்துவிடும் என்ப-தையும் கோடிட்டுக்காட்டியிருந்தார்.

இதனைத் தொடர்ந்து ஜம்யத்துள் உலமா சபையினர் யார் இனவாத நோக்குடன் செயற்பட்டாலும் அவர்களை சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும் என்ற கோரிக்கையை பாதுகாப்புச் செயலரிடம் வைத்தனர். மேலும் முஸ்லிம்களின் இலங்கையின் இருப்பு தொடர்பாக கடந்த சில காலமாக வெளியிடப்படும் செய்திகளும் அதனால் முஸ்லிம் மக்களின் இருப்பிற்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல்-களும் பற்றி விரிவாக விளக்கிய ஜம்யத்துள் உலமா சபையினர் அவ்வாறான செய்திகளைப் பரப்புபவர்களின் மீது கடும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்பதுடன் அவ்வாறான செய்திகளைக் குறுஞ்செய்திகளாக அனுப்புவதைத் தடை செய்யவும் வேண்டும் என்ற கோரிக்கைகளையும் முன்வைத்தனர்.

இதனைத் தொடர்ந்து அம்பாறை மாவட்ட ஜம்யத்துள் உலமா சபையினர் தாம் தற்போது எதிர்-கொள்ளும் யானையின் அச்சுறுத்தல் தொடர்பாக பாதுகாப்புச் செயலரின் கவனத்திற்குக் கொண்டு வந்திருந்தனர். அதனைச் செவிமடுத்த செயலர் இக் கலந்துரையாடலுக்குச் சமூகமளித்-திருந்த பாதுகாப்புத் தரப்பினருக்கு உடனடி நடவடிக்கை எடுக்குமாறு கட்டளையிட்டிருந்தார் என அகில இலங்கை ஜம்யத்துள் உலமா சபையின் திருமலைத் தலைவர் மலைமுரசிற்கு விளக்கியிருந்தார்.

## மூதூரில் இலவச மருத்துவ முகாம்

இலவச ஹோமியோபதி மருத்துவ முகாம் ஒன்று அண்மையில் இடம்பெற்றது இலங்கை மகாத்மா காந்தி நிலையம், கந்தளாய் ரெக்டோ நிறுவனம் மற்றும் மூதூர் தடயம் நிறுவனம் ஆகியன இணைந்து ஏற்பாடு செய்த இந் நிகழ்வு மூதூர் அல்-ஹிதாயா மகா வித்தியாலயத்தல் இடம்பெற்றது. இந் நிகழ்வில் பெருந்தொகையான பொதுமக்கள் கலந்துகொண்டு ஹோமியோபதி சிகிச்சை முறைமை தொடர்பாக கேட்டறிந்து கொண்டனர்.



## சட்டவிரோத கடைகள்..

சட்டவிரோதக் கடைகள் கிண்ணியா நகரசபைத் தலைவர் எம்.எம். ஹில்மியின் முன்னெடுப்பில் அகற்றப்பட்டுள்ளன.

குறித்த பிரதேசத்தினூடாக அதிக வாகன நெரிசல் காணப்படுவதாலும் அக் கடைகளினால் சுற்றுலாப் பயணிகள் பெரிதும் அசௌகரியங்களை எதிர்நோக்கு-வதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இந் நடவடிக்கையானது கிண்ணியா பிரதேசத்தை அழகுபடுத்தும் திட்டமாகும் எனக் குறிப்பிடப்படுகிறது.

இந்த முன்னெடுப்புக்கு எத்தகைய தடை வந்த போதும் அதையும் மீறி இந் நடவடிக்கை தொடரும் என கிண்ணியா நகரசபைத் தலைவர் தெரிவித்துள்ளார்.

## அனைத்து மசாஜ் நிலையங்களும்..

கடந்து சென்றது.

நாம் உள்ளே சென்று அவதானித்த போது ஒரு அறையில் பெண்ணொருவர் மயக்கமுற்ற நிலையில் அரைகுறை ஆடையுடன் அலங்கோலமாக கிடந்தார். அவரின் அருகே தேசிக்காய்த் துண்டுகள் சில கிடந்ததுடன் அவ் அறையின் தரை கழுவப்பட்ட நிலையில் ஈரமாகக் கிடந்தது. அப் பெண்ணிற்கு எம்மாலியன்ற முதலுதவிகளை அளித்தும் அவர் சுய நினைவிற்கு திரும்பவில்லை. அப் பெண்ணிருந்த அறைக்கு அருகில் உள்ள அறையில் மேலும் இரு பெண்கள் இருந்தனர். அவர்களிடம் அலங்கோலப் பெண்ணின் நிலைபற்றிக் கேட்க அவர்கள் தமக்கு எதுவும் தெரியாது எனவும் தாம் தூக்கத்திலிருந்ததாகவும் தெரிவித்தனர்." என்று சம்பவ இடத்திற்கு அருகில் வசிக்கும் நபர் ஒருவர் மலைமுரசின் செய்தியாளர்களுக்கு வாக்குமூலம் அளித்தார்.

கடந்த 22.04.2013 அன்று இரவு 10 மணியளவில் அலஸ்தோட்டத்தில் உள்ள மசாஜ் நிலையமொன்றில் மேற்குறித்த பதற்ற நிலை நிலவியதாக கிடைத்த தகவலுக்கமைய அப்பிரதேசத்திற்கு சென்று அப்பகுதி மக்களுடனான கலந்துரையாடலின்போது மேற்குறித்த விடயத்தை அறிய முடிந்தது.

சம்பவ இடத்தில் பெண்ணின் நிலையை அவதானித்துவிட்டு அவ்வீட்டு உரிமையாளரின் உறவினர் ஒருவரை தொடர்புகொண்டு குறித்த விடயத்தை தெரிவித்ததாயும் அச்சமயத்தில் வவுனியாவில் இருந்த அவர் வீட்டினுள் நுழைந்து தீர்வு காணும்படி தெரிவித்ததாகவும் மக்கள் அத் தொலைபேசி அழைப்பின் பதிவைப் போட்டுக் காண்பித்தனர். கிராம மக்கள் கிராம சேவையாளரின் அனுமதியையும் பெற்றுக்கொண்டு காவல்துறையின் உப்புவெளிப் பிரிவிற்கு அழைப்பை ஏற்படுத்திக்கொண்டே அவ் வீட்டினுள் நுழைந்துள்ளனர்.

உள் நுழைந்த பொதுமக்கள் அம் மசாஜ் நிலையத்தின் உரிமையாளரையும் மற்றொரு இளைஞனையும் வீட்டின் பின்புறமாக ஒளிந்திருந்த நிலையிலேயே கண்டுபிடித்துக் கட்டிவைத்துள்ளனர்.

சம்பவ இடத்திற்கு இரவு கிராம சேவகரும் 11.45 மணியளவில் காவல்துறையினரும் வருகை தந்து விசாரணைகளை மேற்கொண்ட பின் இரு ஆண்களையும் மூன்று பெண்களையும் காவல்துறை கையேற்றுச் சென்றுள்ளது.

மறுநாள் காலையில் மக்களும் உப்புவெளி பிரதேச சபையின் உதவி தவிசாளரும் ஊடகவியலாளர் சந்திப்பொன்றை ஏற்பாடு செய் திருந்தனர். அதன்போது குறித்த மசாஜ் நிலையம் பதிவு செய்யப்பட்டது எனவும் சில மாதங்களுக்கு முன்பு இவ்வாறான பிரச்சினை ஒன்றிற்காக இந் நிலையம் பல லட்சம் ரூபாவை அபராதமாக செலுத்துயுள்ளது எனவும் ததரியவந்தது.

அன்றைய தினம் மதியம் மலைமுரசு குழுவினர் சம்பவம் பற்றிய விடயங்களை மக்கள் வாயிலாக அறிந்து கொண்டிருந்த தருணத்தில் குறித்த மசாஜ் நிலைய உரிமையாளரும் அவரது உறவினரும் அவ்விடத்திற்கு வந்து தமது வீட்டினுள் நுழைந்தது ஒரு திட்டமிட்ட நாடகம் என்றும் அவ்வாறு எதுவுமே அவ் வீட்டில் நிகழ்திருப்பதற்கு வாய்ப்பபுக்கள் இல்லை என்றும், மக்கள் நுழைந்து தமது வீட்டை சேதமாக்கியுள்ளதாகவும் தகராறு செய்ததுடன் மலைமுரசுப் பத்திரிகையாளருடன் பேசிக் கொண்டிருந்த நபர் ஒருவரை தாக்கியமையும் குறிப்பிடத்தக்கது.

குறித்த சம்பவத்தில் காவல்துறையால் அழைத்துச் செல்லப்பட்டவர்கள் குற்றச் சாட்டுக்களின்றி விடுதலை செய்ப்பட்டு தம் சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் மசாஜ் நிலையம் இயங்குவது தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகவும் அலஸ்தோட்ட கிராம சபைத் தலைவர் 25.04.2013 அன்று காலை தெரிவித்தார்.

அத்துடன் இப்பிரச்சினை ஆராயப்பட்டு தீர்வு காணப்படுவதோடு ஊரிற்கு பிரச்சினையாக உள்ள அனைத்து மசாஜ் நிலையங்களும் நீக்கப்படவேண்டும் என்பதே மக்களின் கோரிக்கையாக உள்ளது. இக் கோரிக்கையினை முன்வைத்து மக்கள் ஒன்றிணைந்து செயற்படவுள்ளனர்.

## இரவுக் களியாட்டத்தின் பின்..

செண்பகா மகாவித்தியாலயத்தில் சாதாரண தரம் கற்றுவரும் மாணவனாவார். கடந்த 19ம் திகதி இவருடன் இவரது சகோதரரான அற்புதராஜா இந்தியன் (22 வயது) மற்றும் செல்வநாயகம் குகன் (24 வயது) ஆகியோர் வாகரையில் நடந்த இசை நிகழ்வொன்றிற்கு சென்றுவிட்டு மூவரும் ஒரே உந்துருளியில் வீடு திரும்பும் போது கதிரவெளிக்கும் வெருகலுக்கும் இடைப்பட்ட பிரதேசத்தில் உந்துருளி கட்டுப்பாட்டை இழந்ததால் விபத்துக் குள்ளாகியிருந்தனர்.

இவ் விபத்தில் ஒரு குழந்தைக்குத் தந்தையான செல்வநாயகம் குகன் சம்பவ இடத்திலேயே சாவடைந்தார். ஏனைய சகோதரர்கள் இருவரில் ஒருவரான இந்தியன் உயிருக்காபத்தற்ற நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார். ஆனால் அவரது இளம் சகோதரரான தனுசன் உயிருக்குப் போராடிய நிலையில் கடந்த ஒரு வாரமாக மட்டக்களப்பு வைத்திய சாலையில் சுயநினைவற்ற நிலையில் இருந்துள்ளார். அவரை மேலதிகச் சிகிச்சைக்காகக் கண்டி வைத்திய சாலைக்கு மாற்ற எடுத்த முயற்சிகளின் போது அவர் உயிரிழந்துள்ளார்.

## ஆசிரியர் பயமுறுத்தல்..

மாணவர்களின் ஒழுங்கு விடயத்தில் கடும் கண்டிப்பான ஆசிரியரான இவர் பாடசாலை மாணவர்களின் சிகை மற்றும் முகச் சவரம் தொடர்பாகக் கண்டிப்புடன் நடந்து கொள்கின்றார்.

அண்மையில் சிகை அலங்கார நிலையங்களுக்கும் சென்றிருந்த ஆசிரியர் குழாமொன்று திருமலை மாவட்ட் சிகை அலங்கரிப்பாளர் சங்கத் தலைவரிடம் பாடசாலை மாணவர்களுக்குரிய முறையில் சிகை அலங்கரிப்பை மேற்கொள்ளுமாறு கோரியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அக் கோரிக்கையை பெருமளவு சிகை அலங்கரிப்பு நிலையங்கள் ஏற்றுக்கொண்டுள்ள போதும் ஓரிரு நிலையங்கள் ஏற்க மறுத்ததாகவும் மலைமுரசிற்குத் தெரியவருகின்றது.

மண்டையோட்டை தனது வீட்டு வாசலில் அதிகாலை கண்டு கொண்ட குறித்த ஆசிரியர் 119 என்ற அவசர காவல்துறை தொலைபேசிக்கு ஏற்படுத்திய அறிவிப்பைத் தொடர்ந்து இராணுவத்தினரும் பொலிசாரும் இணைந்து விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். ஏற்கனவே இவரது வீட்டின் மீதும் கல்லெறித் தாக்குதல் நடைபெற்றதாக தெரியக்கிடைக் கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## அறிந்துகொள்ளுங்கள்

### ஆழமான ஏரிகள்

| ஏரிகள் | ஆழம் (மீ) |
|---|---|
| பைகல் - ரஷ்யா | 1,620 |
| தங்கநிக்கா - ஆபிரிக்கா | 1,463 |
| கஸ்பியன் கடல் - ஐரோப்பா | 1,025 |
| மலாவி நியாசா - ஆபிரிக்கா | 706 |
| இஸிக்குல் - கிர்கிஸ்தான் | 702 |

### ஆழமான எரிமலைகள்

| பெயர் - நாடு | ஆழம் (மீ) |
|---|---|
| லஸ்கார் - சிலி | 5,990 |
| கோட்டோ பாக்ஸி - ஈக்வாடர் | 5,897 |
| கயூச்சிவாஸ்காயா - ரஷ்யா | 4,750 |
| கோலிமா - மெக்ஸிகோ | 4,268 |
| மௌனாலோவா - ஹவாய் | 4,170 |
| காமஷருன் | 4,070 |
| ஃபயூகோ - கௌதமாலா | 3,835 |
| எரோபஸ் - அண்டார்டிகா | 3,795 |
| நைராகோங்கோ - சாயிர் | 3,475 |
| எட்னா - சிசிலி | 3,369 |
| லைமா - சிலி | 3,121 |
| லிலியாம்னா - அலாஸ்கா | 3,076 |
| நயாமுராகிரா - சாயிர் | 3,056 |
| செயின்ட் ஹெலன்ஸ்-அமெரிகா | 2,949 |

### ஆழமான குகைகள்

| குகைகள் | ஆழம் (மீ) |
|---|---|
| ரெஸ்யூ டியூ ஃபோய்லிஸ் - பிரான்ஸ் | 1,455 |
| ரெஸ்யூ டி லா ஃபிரே முயு - பிரான்ஸ் | 1,321 |
| செஸ்நயா காகசஸ் - ரஷ்யா | 1,280 |
| சிஸ்டமா ஹவாட்லா - மெக்ஸிகோ | 1,220 |

## கௌதம புத்தர்




கௌதம புத்தரை அடிப்படையாகக் கொண்டு பௌத்த சமயம் உருவாக்கப்பட்டது. இவர் கி.மு 563க்கும் கி.மு 483க்கும் இடையில் வாழ்ந்தவர். பிறக்கும் போது இவருக்கிடப்பட்ட பெயர் சித்தார்த்த கௌதமர் என்பதாகும். பின்னர் இவர் ஞானம் பெற்று புத்தர் ஆனார். இவர் ''சாக்கிய முனி'' என்றும் அழைக்கப்பட்டார். புத்த சமயத்தின் மிகவும் முக்கியமானவரென்ற வகையில், கௌதமருடைய வாழ்க்கையையும், வழிகாட்டல்களையும், துறவிமட விதிகளையுமே, கௌதமரின் மறைவுக்குப்பின், சுருக்கி பௌத்தத் துறவிகள் மனனம் செய்துவந்தார்கள். அவற்றுள் மிக முக்கியமானதாக தம்மபதம் விளங்குகிறது, பிற மத நூல்களைப் போன்று அல்லாமல் இந்நூல் மக்களின் சாதாரண பேச்சு வழக்கில் உருவாக்காப்பட்டது. மேலும் எளிய நடை இதன் சிறப்பம்சம் ஆகும்.

சீட பரம்பரையூடாக வாய்மொழி மூலம் கடத்தப்பட்டுவந்த இத் தகவல்கள், 100 வருடங்களுக்குப் பின்னர் திரிபிடகம் என்று வழங்கப்படும் நூலாக எழுத்து வடிவம் பெற்றது.

## ஒற்றுமையே சிறந்தது

ஒரு காட்டுப் பகுதிக்குள் 6 எருமை மாடுகள் ஒன்றாக ஒற்றுமையாக வாழ்ந்து வந்தன. அவைகள் சாப்பிடப்போகும் போதோ, தண்ணீர் குடிக்கப் போகும் போதோ எப்போதும் ஒன்றாகவே காணப்படும். அவர்களுக்குள் எப்போதும் சண்டையே வந்ததில்லை. அவை நன்றாக சாப்பிட்டு கொழு கொழு என்று இருந்தன. இதில் ஒன்றையாவது சுவைத்துப் பார்க்க ஆசைப்பட்டு காட்டு ராஜா சிங்கம் இவர்களை நோட்டமிட்டுக் கொண்டிருந்தது. அவை எப்போதும் ஒற்றுமையாகவே இருப்பதனால் சிங்கத்தின் பல நாள் முயற்சி தோற்றுப் போய்க் கொண்டே இருந்தது. இவையனைத்தையும் கண்காணித்துக் கொண்டிருந்த ஓர் நரி சிங்கத்திடம் வந்து தான் உதவி செய்வதாகவும் தனக்கும் ஓர் சிறு பங்கை உண்ணத் தருமாறும் கூறியது. அவைகள் எல்லாரும் ஒற்றுமையாகவே இருப்பதால் எம்மால் ஒன்றும் செய்யமுடியாது. முதலில் அவ் ஒவ்வொருவரையும் தனித்தனியாகப் பிரிக்க வேண்டும். பிரித்து அவை ஒவ்வொன்றும் தனித்தனியே உணவு தேடச் செல்லும் போது நீங்கள் சென்று வேட்டையாடுங்கள் என்று சிங்கத்திற்கு ஆலோசனை கூறியது. அதன் படியே அவை நீரோடையில் நீர் அருந்திவிட்டு திரும்பிச் செல்லும் போது ஓர் மாடு சற்றுப் பின்னால் சென்றது. அதைக் கண்டதும் நரி அதன் அருகில் சென்று நீங்கள் அனைவரும் ஒன்றாகத் திரிவதால் உனக்கு கிடைக்கும் உணவு குறைவாக இருக்கின்றது. பார் அவை அனைவரையும் விட நீயே மிகவும் மெலிவாக காணப்படுகின்றாய். ஆகவே இனியாவது இவர்களுடன் சேர்ந்து திரிவதை விடுத்து தனித்து சென்று உனக்குத் தேவையான உணவைத் தேடிக்கொள் என்றது. நரியாரின் தந்திரத்தை அறியாத அம்மாடு அக்கருத்தை ஏனையோரிடம் கூறி தனக்கு உணவு போதாது ஆகவே தான் தனித்து சென்று உணவு தேடப்போவதாகக் கூறியது. அதனை இன்னும் மூன்று மாடுகளும் சேர்ந்து ஆமோதித்தது. ஏனைய இரண்டும் இது எமக்கு ஆபத்தை ஏற்படுத்தும். ஆகவே பிரிந்து தனித்துச் செல்ல வேண்டாம். நரி தந்திரம் மிக்கது. அதன் பேச்சை நம்பி எம்மை விட்டுப் பிரிந்து செல்ல வேண்டாம் என எவ்வளவோ கூறியது. எனினும் மற்றைய நான்கும் அம்மாடு கூறியதை செவிமடுக்கவில்லை. தனித் தனியே பிரிந்து சென்றன. ஏனைய இரண்டும் எப்பவும் போல ஒன்றாகவே சென்றன. இதனைக் கண்ட நரி இச்செய்தியை உடன் சிங்கத்திற்குத் தெரியப்படுத்தியது. சிங்கமும் உடனடியாக அந்த இடத்திற்கு விரைந்தது. அதற்கு அளவில்லாத மகிழ்ச்சி. அவ்வழியால் தனித்து வந்த மாட்டை வேட்டையாடத் துரத்தியது. அதன் அழுகுரல் அக்காட்டுப் பகுதிக்குள் பரவியது. அது தனது முழு சக்தியையும் தப்பித்துக் கொள்வதற்காக போராடியது. தூரத்தில் மாட்டின் அழுகுரல் கேட்பதை உணர்ந்த அவ்விரு மாடுகளும் சத்தம் வந்த இடத்தை நோக்கி ஓடின. சிங்கம் வேட்டையாட முதல் அவ்விரண்டு மாடுகளும் அவ்விடத்திற்கு சென்று சேர்ந்தன. அத்துடன் ஏனைய மாடுகளும் சத்தம் வந்த இடத்திற்கு வந்து சேர்ந்தன. அனைத்து மாடுகளும் ஒன்றானதைக் கண்ட சிங்கம் இதற்கு மேல் தன்னால் அவைகளை வேட்டையாட முடியாது என எண்ணி அவ்விடத்தை விட்டுச் சென்றது. நரியும் தனது முயற்சி பலனளிக்கவில்லையே என கவலைப் பட்டுக் கொண்டு சென்றது. பிரிந்து சென்ற நான்கு மாடுகளும் ஏனைய இரு மாடுகளிடமும் மன்னிப்புக் கேட்டன. தாங்கள் செய்த தவறைப் புரிந்து கொண்டோம் இனி இத் தவறைச் செய்ய மாட்டோம் எனவும் கூறின. இனி நாம் அனைவரும் எப்போதும் ஒற்றுமையாகவே இருக்கவேணும் எனக் கூறி மீண்டும் ஒற்றுமையாகச் சென்றன.




# பெண்களுக்கு இரும்புச்சத்து
## மாத்திரைகள் நல்லதா? உணவுகள் நல்லதா?

கர்ப்பிணிப் பெண்களுக்கும் சாதாரண பெண்களுக்கும் தேவைப்படும் இரும்புச்சத்தை விட 50சதவீதம் அதிகம் தேவைப்படும். சாதாரணமாக பெண்களுக்கு நாள் ஒன்றுக்கு 9 மி.கி. அளவு தேவை. ஆனால் கர்ப்பகாலத்தில் இதன் அளவு 27 மி.கி. அளவு தேவைப்படுகிறது.

தினசரி உணவில் 30 மி.கி. இரும்பு சத்து கிடைக்கும் வகையில் இருக்கவேண்டும்.

அதிகமாக உடற்பயிற்சி செய்வோர்களின் இரத்த சிவப்பணுக்கள் விரைவில் இடமாற்றம் அடைகின்றன. மேலும் பழைய சிவப்பணுக்களை அழித்துவிட்டு புதியதை அதிகம் உற்பத்தி செய்கின்றன. இதற்கு இரும்புச்சத்து அதிகம் தேவை. இதனால் அதிக உடற்பயிற்சி செய்பவர்கள் இரும்புச்சத்து நிறைந்த உணவுகளை உண்பது நல்லது.

குழந்தைகளுக்கு தேவைக்கதிகமாக இரும்புச்சத்து நிறைந்த மருந்து மாத்திரைகளைக் கொடுத்தால் அது உடலில் நச்சுப் பொருளாக மாறிவிடுகிறது. இதனால் குழந்தைகளுக்கு இரும்புச் சத்து கொடுக்கும் மருந்து மாத்திரைகளை தவிர்ப்பது நல்லது. உணவின் மூலம் கொடுப்பதே சாலச் சிறந்தது. பொதுவாக இரும்புச்சத்து உணவின் மூலம் உடலுக்குக் கிடைப்பது சாலச்சிறந்தது. மருந்து மாத்திரைகள் மூலம் கிடைப்பது அவ்வளவு சிறப்பானதாக அமையாது.

தேநீர், மதுபானம் போன்றவற்றை அதிகம் அருந்துபவர்களுக்கு அதில் உள்ள கார்பாலிக் அமிலம் குடலில் இரும்பு சத்து உறிஞ்சப்படுவதை தடுக்கிறது. இதனால் மேற்கண்ட பானங்களை தவிர்ப்பது நல்லது.

கர்ப்ப காலத்தில் இரும்புச்சத்து அதிகம் தேவை என்பதால் மருந்து மாத்திரை அதிகம் எடுத்தால், அது வாயுவை அலர்ஜியுறச் செய்யும். மலச்சிக்கலை ஏற்படுத்தும். வாந்தி, வயிற்றுப் போக்கு, உடல் சோர்வு, தலைச்சுற்றல், மயக்கம் போன்றவற்றை உண்டாக்கும். சிலசமயங்களில் கருவுக்கே பாதிப்பை ஏற்படுத்தும்.

இரும்புச்சத்து நிறைந்த உணவுகள்

முருங்கைக் கீரை, அகத்திக் கீரை, பொன்னாங்கண்ணிக் கீரை, ஆரைக்கீரை, புதினா, குப்பைக் கீரை போன்றவற்றில் அதிகம் உள்ளது. அதுபோல் பழங்களில் பேரீச்சை, அத்திப்பழம் போன்றவற்றில் அதிகம் உள்ளது. மற்ற பழங்களிலும் ஓரளவு உள்ளது.

முட்டை, மீன், ஆட்டு ஈரல் போன்றவற்றில் இரும்புச்சத்து அதிகம் உள்ளது.

## அன்னாசிக் கோழிக் கறி

*தேவையான பொருட்கள் :*

கோழிக் கால்கள் - அரை கிலோ, வெங்காயம் - 150 கிராம், கரட் - 100கிராம், மிளகுத் தூள் - அளவிற்கு, உப்புத்தூள் - அளவிற்கு, சீனி - 1 தே.க, கறி மிளகாய்த் தூள் - 2மே.க, வினாகிரி - 1 மே.க, சோயா சோஸ் - 2மே.க, தக்காளி சோஸ் - 2மே.க, ேங்காயெண்ணெய் - அரை போத்தல், அன்னாசி - 1பழம் (சிறியது), பச்சைப் பட்டாணிக் கடலை - 100 கிராம், சோளமா - 2 மே.க, தண்ணீர் - முக்கால் தம்ளர், கறிமிளகாய் - 100 கிராம், மாஜரீன் - 50 கிராம், உள்ளி - 4 பல்லு

*செய்முறை :*

கோழிக்கால்களிற்கு உப்புத்தூள், வினாகிரி சேர்த்துப் புரட்டி 1 மணி நேரம் ஊற வைத்த பின் கொதிக்கும் எண்ணெயிலிட்டு பொன்னிறமாக பொரித்தெடுத்துக் கொள்ளவும். பின்னர் கரட், வெங்காயம், உள்ளி, கறிமிளகாய், அன்னாசிப்பழம் என்பவற்றைத் துப்பரவாக்கிக் கழுவி தனித்தனியாக அளவான துண்டுகளாக வெட்டிக் கொள்ளவும். கடலையை 3 மணிநேரம் ஊறவைத்து அவித்தெடுக்குக. தாச்சியில் மாஜரீனையிட்டு அடுப்பில் வைத்து உருகியதும் அதனுள் வெங்காயம், கரட், கறிமிளகாய் என்பவற்றையிட்டு வதங்கவிட்டு அரைப்பதமாக வதங்கியவுடன் அன்னாசித் துண்டுகளையுமிட்டு நீர்த்தன்மை சுண்டும் வரை வதக்கி அதனுள் மிளகுத் தூள், உப்புத்தூள், மிளகாய்த் தூள், கடலை, சீனி என்பவற்றையிட்டு நன்கு சேர்த்துக் கொள்ளவும். பின்பு கலவையுள் சோயா சோஸ், தக்காளி சோஸ் என்பன விட்டு நன்கு சேர்த்துக் கொண்ட பின், பொரித்து வைத்துள்ள கோழிக் கால்களை அதனுள் சேர்த்துக் கறி திரளத் தொடங்கியதும் இறக்கிக் கொள்ளவும்.

## தாமரை கிழங்குக் கறி

*தேவையான பொருட்கள் :*

தாமரைக்கிழங்கு - கால் கிலோகிராம், அப்பச்சோடா - 2 சிட்டிகை, மஞ்சள் தூள் - அரை தே.க, பம்பாய் வெங்காயம் - 1, உள்ளி - 2 பல், தேங்காயெண்ணெய் - 5 மே.க, மிளகாய்த்தூள் - 1 மே.க, மிளகுத் தூள் - 1தே.க, சோள மா - 1 தே.க, உப்புத் தூள் - அளவிற்கு, ரேஸற்மேக்கர் - அளவிற்கு, வெங்காயப்பூத் தண்டு - 10, தக்காளி சோஸ் - 2 மே.க

*செய்முறை :*

தாமரைக் கிழங்கை துப்பரவு செய்து கழுவி ஒரு அங்குல நீளமுள்ள சரிவான துண்டுகளாக வெட்டிக் கொள்க. வெங்காயப்பூத் தண்டையும் அளவான துண்டுகளாக வெட்டிக் கொள்க. பாத்திரத்தில் தாமரைக்கிழங்கையிட்டு அப்பச்சோடா, மஞ்சள் தூள் அளவிற்கு உப்புத்தூள் என்பவற்றையிட்டு தண்ணீரை அளவிற்கு விட்டு நீர் வற்றும் வரை அவித்தெடுத்துக் கொள்ளவும். பம்பாய் வெங்காயத்தைத் துப்பரவு செய்து சிறு வட்ட வடிவமாக வெட்டிக் கொள்ளவும். உள்ளியைச் சிறு சிறு துண்டுகளாக வெட்டிக்கொள்ளவும். தாச்சியில் எண்ணெயையூற்றி கொதிக்க வைத்து, கொதித்ததும் வெட்டிய வெங்காயம், உள்ளி என்பவற்றையிட்டு ஓரளவு வதங்கியவுடன் அவித்த தாமரைக்கிழங்கை இட்டுக் கிளறி அதனுள் மிளகாய்த்தூள், சோள மா என்பவற்றையிட்டு நன்கு சேர்த்துக் கொண்ட பின் வெங்காயப்பூ தண்டையிட்டு சிறிது நேரம் மூடி அவியவிட்டு அளவிற்கு உப்புத்தூள், ரேஸ்ற்மேக்கர், தக்காளிச் சோஸ் என்பவற்றையிட்டுக் கலந்து கறி திரளத் தொடங்கியதும் இறக்கிக் கொள்ளவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்த வார ஆங்கிலப் பத்திரிகைகளின் மீதானபார்வை...



## The Sunday Times:

### உயர் வலுக்கொண்ட மோட்டார்சைக்கிள்களை அனுமதிக்கும் வர்த்தமானி அறிவித்தல்

1000 (CC) உருளைக் கொள்ளவு வரைக்குமான கொண்ட மோட்டார் சைக்கிள்களை நாட்டுக்குள் அனுமதிப்பது தொடர்பான விசேட சட்டத் திருத்தங்களை மேற்கொள்ள முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இவை ''விளையாட்டுத் தேவைகளுக்கானவை'' என்ற அடிப்படையில் அனுமதிப்பது என்றும் முடிவாகியுள்ளது.

இவ் வனுமதிக்கான அரசின் வர்த்தமானியானது வேகமாகத் தயாரிக்கப்பட்டு விளையாட்டு அமைச்சின் பெயரால் இவ்வாரம் வெளியிடப்படுவதற்கான முனைப்புகள் இடம்பெறுகின்றன. புதிய தெருவலைப்பின்னல்களின் பின் அரசு புதிய வேக கட்டுப்பாடுகளை விதிக்கும் முடிவினை மேற்கொண்டுள்ளது. அவ்வாறு புதிய வேகக் கட்டுப்பாடுகளை அறிவிக்கும்போது இவ் அறிவிப்பும் சேர்ந்து வெளியிடப்படும் எனத் தெரிய வருகின்றது.

இவ் அதிகூடிய வலுக் கொண்ட மோட்டார் சைக்கிள்களை சாதாரண தெருக்களில் பாவிப்பது தடைசெய்யப்படும். தற்போது 600 உருளைக் கொள்ளளவைக் கொண்ட மோட்டார் சைக்கிள்களை காவல்துறையினர் பயன்படுத்தி வருகின்றனர். அவர்கள் பாவிக்கும் கொள்ளவை விடக் கூடிய கொள்ளவைக் கொண்ட மோட்டார் சைக்கிகளை குற்றமிழைப்பவர்கள் பாவிப்பார்களானால் காவல்துறையினர் சிரமங்களை எதிர்கொள்ள நேரிடும் என்று போக்குவரத்துக் காவல்துறைத் தலைவர் தெரிவித்துள்ளார்.

### பொதுநலவாய மகாநாட்டை இலங்கையில் நடாத்துவதா? இல்லையா?

பொதுநலவாயத் தலைவர்களின் மகாநாட்டைத் திட்டமிட்டபடி இலங்கையில் நடாத்துவதா இல்லையா என்ற முடிவை எடுப்பதற்காக பொதுநலவாய அமைச்சர்கள் செயற்குழு கூடி ஆலோசிக்கவுள்ளது. எனினும் இலங்கையிலேயே இக்கூட்டத்தை நடாத்துவதில் பொதுநலவாயச் செயலகம் குறியாகவுள்ளதாகத் தெரியவருகின்றது.

லண்டனில் கூடவுள்ள பொதுநலவாய அமைச்சர்கள் செயற்குழுவின் கூட்டத் தொடரில் இலங்கையிலிருந்து பொதுநலவாய மகாநாட்டை வேறிடத்திற்கு மாற்றுவதா இல்லையா என்பது தொடர்பான முடிவு எடுக்கப்படும் என ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

### மூன்றுமாத வெளிநாட்டுப் பயணத் தடையை எதிர்கொண்டுள்ள 43வது பிரதம நீதியரசர்

சொத்துக்களை வெளிப்படுத்துதல்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களுக்கு பதிலளிக்காமல் தப்பிவிடுவதற்காக வெளிநாட்டிற்குத் தப்பிச் செல்லும் முயற்சிகளை 43வது பிரதம நீதியரசர் கலாநிதி சிராணி பண்டாரநாயக்கா மேற்கொள்கிறார் என இக் குற்றச்சாட்டை ஆராயும் இலஞ்ச ஊழல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதனடிப்படையில் அடுத்துவரும் மூன்று மாதங்களுக்கு 43வது பிரதம நீதியரசரை இலங்கையிலிருந்து வெளியேற அனுமதிக்க வேண்டாம் என குடிவரவு, குடியகல்வுத் துறைக் கட்டுப்பாட்டாளரை ஆணைக்குழு அறிவுறுத்தி உள்ளது.

இவ் அறிவித்தலைத் தாம் 43வது பிரதம நீதியரசருக்குப் பதிவுத் தபால் மூலம் அறிவித்துள்ளதாக தெரிவித்துள்ள குடிவரவு, குடியகல்வுத் துறைக் கட்டுப்பாட்டாளர் தான் இலங்கையின் சட்டத்துறை நிறுவனங்களான நீதிமன்றங்கள், இலஞ்ச ஊழல் ஆணைக்குழு, காவல்துறை போன்றவற்றின் கட்டளைகளை ஏற்று நடக்க கடப்பாட்டைக் கொண்டிருப்பவர் என்பதனையும் தெரிவித்துள்ளார்.

இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவானது தனக்களிக்கப்பட்டுள்ள வெளிநாட்டுத் தடை அதிகாரத்தை அருமையாகவே பயன்படுத்தி வருகின்றது. எனினும் 43வது பிரதம நீதியரசரின் விடயத்தில் ஏப்ரல் 11ம் திகதி இவ் அதிகாரத்தை ஆணைக்குழு பயன்படுத்தியுள்ளது.

## The Sunday Observer:

### பொதுநலவாய மாநாடு திட்டமிட்டபடி நடைபெறும்

திட்டமிட்டபடி இலங்கையில் பொதுநலவாய அரச தலைவர்களின் மகாநாட்டை நடாத்துவதற்கான ஏற்பாடுகள் யாவும் நடைபெற்றுவருவதாக பிரதி வெளிவிவகார அமைச்சர் நியோமல் பெரேரா தெரிவித்துள்ளார்.

இலங்கையிலிருந்து மாநாட்டை வேறு நாடுகளுக்கு மாற்ற வேண்டும் என்ற நோக்கத்தில் இலங்கைக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட பலவிதமான பொய்க்குற்றச்சாட்டுகளை கருத்திற் கொள்ளாமலேயே இந் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என அவர் தெரிவித்தார்.

இலங்கையின் பொதுநலவாய உறுப்புரிமையை இரத்துச் செய்யவேண்டும் என பொதுநலவாய நாடுகளின் சட்டவாளர் பேரவை, பொதுநலவாய நாடுகளின் சட்ட கல்வி கூட்டமைப்பு மற்றும் பொதுநலவாய நாடுகளின் நீதிபதிகளின் சங்கம் ஆகிய இணைந்து கூட்டாக வேண்டுகோளினை விடுத்திருந்தன.

இக்கூட்டான வேண்டுகோளிற்குப் பின்னாலுள்ளவர்கள் யார் எனக் கேள்வியெழுப்பிய போது யாருடைய முறைப்பாடுகள் எல்லாம் நிலுவையில் உள்ளனவோ, விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள், யாரெல்லாம் தமக்கு ஆதரவைக் கோரி அவ்வாதரவு கிடைக்காமற் போயுள்ளனரோ அவர்களே இவ் வேண்டுகோளின் பின்னுள்ள சூத்திரதாரிகள் என பிரதி அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

### வெளிச்சக்திகளை அரசு தடுக்கும் – அனுர பிரியதர்சன யாப்பா!

வடக்கிலும், கிழக்கிலும் உள்ள மக்களிற்காக அரசு அங்கிருந்த பயங்கரவாதத்தை முற்றாக அழித்துள்ள நிலையில் அவ் அரசிற்கு சில வெளிச்சக்திகள் காலக் கெடுக்களை விதிப்பது கவலைக்கிடமானது என பெற்றோலிய வளத்துறை அமைச்சர் அனுர பிரியதர்சன யாப்பா தெரிவித்துள்ளார்.

அரசு ஏற்கனவே நல்லிணக்கத்தை ஏற்படுத்திவிட்டது. முன்னால் போராளிகள் புனர்வாழ்விற்கு உட்பட்டுள்ளனர். அவர்களிற்குத் தொழில்நுட்பப் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. சிலு முன்னாள் பெண் போராளிகள் இராணுவ சேவைக்கு இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.இவ்வாற எல்லாம் செய்துள்ள அரசிற்கு அனைத்து வேலைகளையும் செய்து முடிப்பதற்கு மேலும் சில காலங்கள் தேவையாக உள்ளது. ஆனால் வெளிச்சக்திகள் தமது விருப்பத்திற்குத் தேவையான சிலவற்றைச் செய்வதற்காக தம்மாலான அழுத்தங்களை எம்மீது பிரயோகிக்கின்றன.

உலகின் மிகப் பயங்கரமானவர்களை இல்லாதொழித்துள்ள எமக்கு ஏன் வெளிச்சக்திகள் இவ்வாறு அழுத்தங்களைப் பிரயோகிக்கின்றன என அமைச்சர் கேள்வி எழுப்பினார்.

### சர்வதேச அழுத்தங்களை எதிர்கொள்ள அரசிற்கு ஆதரவளிக்க வியட்னாம் முடிவு

மேற்குலகால் திணிக்கப்படும் எந்தவொரு திணிப்பிற்கும் எதிராக இலங்கைக்கு ஆதரவளிக்க தமது நாடு தயாராக உள்ளதாக வியட்னாமிய கம்யூனிசக் கட்சியின் வெளிவிவாகாரங்களுக்கான பிரதித் தலைவர் கயின் ஹை டாங் தெரிவித்துள்ளார்.

கட்டுமானம், பொறியியல்துறை, வீடமைப்பு பொது வசதிகள் துறை அமைச்சர் விமல் வீரவன்சவுடனான தனது கலந்தரையாடலின் போதே கம்யூனிசத் தலைவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இலங்கையுடனான தமது வரலாற்றுக்காலத் தொடர்பை மேலும் வலுப்படுத்தும் முகமாகவே இந் நடவடிக்கையினைத் தாம் முன்மொழிவதாக அவர் அமைச்சர் விமலிடம் தெரிவித்துள்ளார்.

### மின்கட்டணங்களை அதிகரிக்கும் படியாக அரசு நிர்ப்பந்திக்கப்பட்டது

வினைத்திறனுடன் தடையற்ற மின்விநியோகத்தை வழங்க வேண்டுமாயின் மின் கட்டணங்களை அதிகரிக்க வேண்டும் என்ற அழுத்தத்தை அரசு பொறுத்துக்கொண்டதாக சிரேட்ட அமைச்சர் அதாவுல்லா செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## The Leader

### பொதுமக்களின் நிலம் பறிபோகின்றது

நிரந்தர இராணுவ முகாமினை அமைப்பதற்காக வவுனியாவில் பெருமளவு ஏக்கர் மக்களின் நிலத்தினை அரசு கையகப்படுத்தவுள்ளது.

ஏ 9 வீதிக்கரையில் தேர்வு செய்யப்பட்டுள்ள இந் நிலப்பரப்புத் தொடர்பாக அந் நிலப்பரப்பின் உரிமையாளர்களுக்கு அறிவித்துள்ளதாக காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவ்வமைச்சின் மேலதிகத் தகவல்களின் படி இக் காணிச் சுவிகரிப்பு சட்டப்படியாக நிகழ்வதாகவும் அதற்கான நட்டஈட்டை அக் காணிச் சொந்தக்காரர்கள் பெற்றுக்கோள்வார்கள் என்றும் தெரிய வருகின்றது.

எனினும் இக்காணிச் சுவீகரிப்பை வன்மையாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிர்த்துள்ளது. வடக்கில் போர் முடிவுக்கு வந்த பின்னரான இந் நிலச் சுவீகரிப்புத் தேவையற்றது என அவ்வமைப்பு தெரிவித்துள்ளது.

இக் காணிச் சுவீகரிப்புத் தொடர்பாக இராணுவப் பேச்சாளர் கருத்துத் தெரிவிக்கையில் இராணுவம் காணிகளைக் கையகப்படுத்தும் எவ்வித அதிகாரத்தையும் கொண்டிருக்கவில்லை. ஆனால் இராணுவத் தேவைகளுக்கு நிலம் தேவைப்படும் போதெல்லாம் இராணுவம் காணி, காணி அபிவிருத்தி அமைச்சைக் கோரும். அக்கோரலுக்கேற்ற காணி, காணி அபிவிருத்தி அமைச்சால் இராணுவத்தினர்க்கு காணி ஒதுக்கப்படும் எனத் தெரிவித்துள்ளார்.

மேலும் இராணுவப் பேச்சாளர் தெரிவிக்கும் போது போர் நடைபெறும் போது இராணுவத்தினர் அங்கொன்றும் இங்கொன்றுமாக சிறிய பிரிவுகளாக தற்காலிகக் கொட்டைகளிலேயே நிலைப்படுத்தப் பட்டிருந்தனர். தற்போது அவ் இராணுவத்தினரை அத்தற்காலிக இடங்களிலிருந்து மீள முகாமில் வந்திருக்குமாறு பணிக்கும் போது அவர்களுக்கு வசிக்கும் வீடுகளை அமைக்க வேணடியுள்ளது. அவ்வாறான நிலைமைகளில் நாம் அமைச்சிடம் மேற்கொள்ளும் வேண்டுகோளின்படி அவ்வமைச்சே எமக்கு நிலத்தினை ஒதுக்குகின்றது எனத் தெரிவித்துள்ளார்.

### நாட்டைவிட்டோடிய பத்திரிகையாளர்கள் நாடு திரும்ப முடியுமா?

தமது உயிருக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்து நாட்டை விட்டுத் தப்பியோடிய அனைத்துப் பத்திரிகையாளர்களும் நாட்டுக்குத் திரும்ப முடியும் என ஊடக அமைச்சு அறிவித்துள்ளது. அவ்வாறானதொரு அச்சுறுத்தல் இலங்கையில் பத்திரிகையாளர்களுக்கு இல்லை என அவ் அமைச்சு தெரிவித்துள்ளது.

அவ் அமைச்சின் செயலாளர் தெரிவிக்கும் போது ''இலங்கைக்கு எதிராக ஜெனீவா மனிதவுரிமைப் பேரவையில் தமது கருத்துக்களைத் தெரிவித்த ஊடகவியலாளர்கள் கூட நாட்டுக்குத் திரும்ப முடியும்" எனத் தெரியவருகின்றது.

கடந்த சில மாதங்களுக்குள் மேலும் இரு ஊடகவியலாளர்கள் நாட்டைவிட்டுத் தப்பியோடி வேறு நாடுகளில் தஞ்சம் கோரியள்ளதாகச் செயலாளர் தெரிவித்துள்ளார். " எனக்குத் தனிப்பட்ட முறையில் எந்த ஊடகவியலாளரும் அச்சுறுத்தல் இருப்பதாக அறிவிக்கவில்லை" என அவர் மேலும் தெரிவித்தார்.

எனினும் சுதந்திர ஊடக இயக்கத்தின் அமைப்பாளர் திரு. சுனில் ஜெயசூரிய தனது கருத்தை இவ்விடயம் தொடர்பாகத் தெரிவிக்கும் போது "ஊடக அமைச்சினால் ஊடகவியலாளரின் உயிருக்கு உத்தரவாதம் அளிக்க முடியாத நிலையுள்ளதாக தெரிவித்துள்ளார்.

### ஆனையிறவுக் கடவையில் மீண்டும் பரிசோதனை !!!

கடந்த மாதம் முதல் ஆனையிறவுக் கடவையில் வாகனங்களையும் பொதுமக்களையும் பரிசோதிக்கும் பணி நடைபெறுவதாக செய்திகள் தெரிவிக்கின்றன. உதயன் பத்திரிகை நிறுவனத்தின் மீது கடந்த வாரங்களில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலைத் தொடர்ந்தே இப் பரிசோதனை முயற்சி மேற்கொள்ளப்படுகின்றது. எனினும் பரிசோதனைகள் தொடர்ச்சியாக நடாத்தப்படாமல் எழுந்தமானமாகவே நடாத்தப்படுவதாக இராணுவப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

# முரசின் விளையாட்டு செய்திகள்

## மின்னொளியில் திருமலையில் மென்பந்துப் போட்டிகள்

## கிண்ணத்தை வென்றது வெள்ளைமணல் கோல்டன் ஸ்டார் விளையாட்டுக் கழகம்



வேல்ஸ் கழகம் தமது 30 வருட நிறைவை முன்னிட்டு பெரும் எடுப்பில் நாட்டதிய கன்னி மின்னொளித் துடுப்பாட்டப் போட்டிகள் மிகச் சிறப்பாக நிறைவுற்றுள்ளன.

40 கழகங்கள் பங்குபற்றிய இப் போட்டியின் இறுதி நாளன்று தேசிய வானொலிச் சேவையான சூரியன் எவ்.எம் தமது சேவையின் ஊடாகப் போட்டியினை நேரடி ஒளிபரப்புச் செய்திருந்தமை குறிப்பிடத் தக்கது. இப் போட்டியின் இறுதிப் போட்டியில் யங்ஒலிம்பிக்ஸ் கழகத்தை எதிர்த்தாடிய வெள்ளைமணல் பிரதேசத்தில் கோல்டன் ஸ்டார் கழகம் இரண்டு இலக்குகளை மட்டுமே இழந்து வெற்றிக்குத் தேவையான ஓட்டங்களைப் பெற்று 8 விக்கட்டுக்களால் வெற்றிக் கேடயத்தைத் தனதாக்கிக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

கோல்டன் ஸ்ரார் கழகத்தின் துடுப்பாட்டத்தை விட பந்து வீச்சு மிகத் துல்லியமாக அமைந்திருத்தமை இப் போட்டிகள் முழுவதும் அவ்வணி வெற்றிகளைக் குவிக்க ஏதுவாயிருந்தது.

இறுதிப் போட்டியில் ஒரு கட்டத்தில் யங்ஒலிம்பிக்ஸ் கழகம் 5 ஓட்டங்களுக்கு 5 இலக்குகளைப் பறிகொடுத்திருந்தது. எனினும் யங்ஒலிம்பிக்ஸ் கழகத் தலைவரின் பொறுப்பான ஆட்டத்தால் ஓரளவிற்கேனும் ஓட்டங்களை அவ்வணி பெற்றுக் கொண்டிருந்தது. (கதிரவன்)


குணா கல்வி நிலையம்

சிறந்த பெறுபேறுகள் - 2012ன் சாதாரண தர பரீட்சை


| | | | |
|---|---|---|---|
| ரா. ஆரவி | - 9A | ச. பிரியங்கா | - 7A, B, C |
| அ. ஹம்சாயினி | - 9A | எ. வேஜினியா | - 6A, 3B |
| கி. தனுசுந்தர் | - 8A, B | ச. சுமரி | - 3A, 4B, 2C |
| ஜா. சாதீர் | - 7A, 2B | | |

238, நீதிமன்ற வீதி, திருகோணமலை. 0777034908


## 3ம் வருட கிழக்கு மாகாணப் புதுவருட விழா (ஸ்ரீ)

கிழக்கு மாகாணத்தின் மலர்வின் பின்னர் உதயமாகும் மூன்றாவது புதுவருடத்தை முன்னிட்டுப் பல விழாக்களும் விளையாட்டு நிகழ்ச்சிகளும் நடாத்தப்பட்டன.

மாகாணத் திணைக்களங்களுக்கிடையே நிகழ்ந்த இவ் விளையாட்டுப் போட்டிகளில் பாரம்பரிய மற்றும் நவீன விளையாட்டுக்களில் அரச அலுவலர்கள் பங்கேற்று இருந்தனர். இவ்விழாவிற்குக் கிழக்கு மாகாண ஆளுனர் ரியர் அட்மிரல் மொகான் ஜெயமகா பிரதம அதிதியாகக் கலந்துகொண்டிருந்தார். கௌரவ அதிதியாக கிழக்கின் முதலமைச்சர் அப்துல் மஜீத்தும், விசேட விருந்தினர்களாக மாகாண அமைச்சர்களும் கலந்திருந்தனர்.



## இலங்கை வங்கியின் விளையாட்டுப் போட்டிகள்

2013ம் ஆண்டிற்கான கிழக்குமாகாண இலங்கை வங்கியின் விளையாட்டுப் போட்டிகள் கடந்த சனிக் கிழமை நடந்தேறின. ஸ்ரீ கோணேஸ்வரா இந்தக் கல்லூரியின் மைதானத்தில் நிகழ்ந்த இவ் விளையாட்டுப் போட்டிகளில் கிழக்கு மாகாணத்தின் இலங்கை வங்கி அலுவலுர்கள் முழுவதுமாகக் கலந்து சிறப்பித்திருந்தனர். (கதிரவன்)




## சட்டவிரோத வெளிநாட்டு பயணத்தால் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள்

### - கண்காட்சி -

திருகோணமலை மாவட்ட பெண்கள் வலையமைப்பும், கிழக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களமும் இணைந்து நடாத்திய "சட்ட விரோதமாக போலி முகவர்கள் ஊடாக மத்திய கிழக்கு நாடுகளுக்குச் செல்லும் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளும், தாக்கங்களும்" எனும் தொனிப்பொருளினை அடிப்படையாகக் கொண்ட கண்காட்சியும், மாநாடும் இன்று 20.04.2013 (சனிக்கிழமை) பெண்கள் வலையமைப்பு இணைப்பாளர் திருமதி.ந.அஞ்சலிதேவி அவர்களின் தலைமையில் திருகோணமலை மாவட்டத்தில் உள்ள தி/அலஸ் தோட்டம் ஸ்ரீ மாதுமை அம்பாள் வித்தியாலயத்தில் நடைபெற்றது.


இந்நிகழ்வில் 1000 இற்கு மேற்பட்ட மூவின மக்களும் கலந்து கொண்டனர். மட்டக்களப்பு மாவட்ட வாகரைப் பிரதேசம் முதல் திருகோணமலை மாவட்ட குச்சவெளி பிரதேசம் வரையான 10 பிரதேச செயலாளர் பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கதாகும்.

இந்நிகழ்வில் கிழக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் திரு.என் மணிவண்ணன், திருகோணமலை மாவட்ட இளைஞர் அபிவிருத்தி அகத்தின் இணைப்பாளர் திரு.க.லவகுசராசா, திருகோணமலை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணிமனை அதிகாரி, மற்றும் சட்டத்தணி ஜெகஜோதி, யோகேஸ்வரன், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கிராம அதிகாரிகள், சமூக சேவை உத்தியோகத்தர்கள் மற்றும் மனித உரிமை ஆர்வலர்களும் விருந்தினர்களாகக் கலந்து கொண்டிருந்தனர்.

இந்நிகழ்வில் வெளிநாடு சென்று பாதிக்கப்பட்டவர்களுடனான நேரடிக் கலந்துரையாடல்கள், இப்பாதிப்புக்களை வெளிக்கொணரும் வகையிலான கலை நிகழ்வுகளும் இடம்பெற்றது.

மற்றும் இந்நிகழ்வில் இளம் பிள்ளைகளை வீடுகளில் பாதுகாப்பற்ற முறையில் விட்டு மத்திய கிழக்கு நாடுகளுக்குச் செல்லுகின்ற குடும்பங்களிலுள்ள பிள்ளைகள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளை வெளிக்கொணரும் வகையில் திருமலை ஏ.மதன் அவர்களின் கதை,திரைக்கதை, வசனம் மற்றும் இயக்கத்தில் உருவாக்கப்பட்ட "பசிகள்" குறுந்திரைப்படம் சமூக சேவைத் திணைக்களப் பணிப்பாளராலும், அகம் மாவட்ட இணைப்பாளராலும் வெளியிட்டு வைக்கப்பட்டு பார்வையார்களுக்கும் காண்பிக்கப்பட்டது. (செ.கலாரதன்)





## நீங்களும் எழுதலாம் வாசகர் வட்டத்தின் பௌர்ணமி தின நிகழ்வு

நீங்களும் எழுதலாம் வாசகர் வட்டத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் பௌர்ணமி தின நிக்ழ்வு. இன்று மாலை 4.30 மணிக்கு தி/பெருந்தெரு விக்நேஸ்வர மகா வித்தியாலயத்தில் நடைபெற உள்ளது.

இந்நிகழ்வின் தொடக்க உரையை 'நீங்களும் எழுதலம்' கவிதை இதழின் ஆசிரியர் எஸ்.ஆர், தனபாலசிங்கம் நடாத்த உள்ளார். அதைத் தொடர்ந்து "இலக்கியமும் கசக்கும் உண்மைகளும்" எனும் தலைப்பில் உரையும் உரையாடலும் இடம்பெற உள்ளது. இவ் உரையை ஆங்கில போதானாசிரியர் அ.யூ. புஸ்பராஜா அவர்களும் உரையாடலை சபையோரும் நிகழ்த்தவுள்ளனர்.

மேலும் "நாம் எங்கே போகிறோம்?" எனும் தலைப்பிலான திறந்த பாவரங்கும் இறுதியில் சபையோர் கருத்தாடலும் நடைபெற உள்ளது.


மலைமுரசு பத்திரிகையின் உத்தியோகபூர்வ விநியோகத்தர்கள் - திருமலை நகர லியோ கழகத்தினர்

The official distributor of Malaimurasu is Leo club of Trincomalee Town

இப் பத்திரிகை, ஸ்ரீராம் பிரதர்ஸ் (பிறைவேட்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் 27. 04. 2013 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org